ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...


# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு ஒக்டோபர் - 2024




நீதிமொழிகள் 25:13





100/=



"எல்லா வேண்டல்களையும்
[illegible]ட்டுகளையும் இறைவனிடம்
[illegible]ங்கள்; எப்போதும் தூய ஆவியின்
[illegible] கொண்டு வேண்டுதல் செய்யுங்கள்
[illegible]ல் உறுதியாய் நிலைத்திருந்து,
விழிப்பாயிருங்கள்; இறைமக்கள்
[illegible]னைவருக்காகவும் மன்றாடுங்கள்"

எபேசியர் 6:18

ISSN : 2012-6352 Reg.No.187317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் - 54 ஒக்டோபர் 2024 இதழ் - 09



- **ஆசிரியர் :**
  அருட்தந்தை. பிறைனர் செலர்
- **துணையாசிரியர் :**
  திரு. பெஸ்லியோ வாஸ்
- **நூல் வடிவமைப்பு :**
  திருமதி. சுபாஜெனி சங்கர்



**வெளியீடு**

**சமூகத் தொடர்பு நிலையம்,**
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபால் செலவு உட்பட)


## அன்புடன் உங்களோடு ...

சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஒரு தினம் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. அதுவே சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்டோபர் 1ம் திகதியாகும்.

1954ம் ஆண்டில் சிறுவர் தினம் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. வலியுறுத்தியது. 18 வயதிற்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி சர்வதேச ரீதியில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமை பிரகடனத்தில் 1981ம் ஆண்டு இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழுகின்ற மக்கள் தொகையில் மூன்று பகுதியினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் மற்றும் சிறுவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் பங்கினை மறுப்பதற்கில்லை.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 2008 ஜூன் மாதம் 12ம் திகதி 'சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினம்' அனுஷ்டிக்கப்பட்டது. சிறுவர்கள் ஒரு நாட்டினதும், ஒரு சமுதாயத்தினதும் அச்சாணி என்பது நாம் அறிந்த விடயம். ஒரு சமூகத்தினது தூண்களாகவும், ஒரு நாட்டினது முதுகெலும்பாகவும் செயற்பட இருப்பவர்களும் இவர்களேதான். இவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவார்களேயானால் அந்த சமூகம், நாடு தலைநிமிர்ந்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சிறு பிராயம் என்பது இனிமையானது. பெரியோர்களாகிய நாம் அனைவரும் கடந்து வந்த பருவமாகும். இதில் மகிழ்ச்சிடையாத மற்றும் தமது கடந்த கால சிறு பராயத்தினை நினைத்து இனிமையாக அசைபோடாத எவரும் இருக்க மாட்டார்கள். எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகைக் காப்பதற்கு....



– தொடர்ச்சி 8ம் பக்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...


| | |
|---|---|
| 1. ஓய்வுநிலை ஆயர் | 02 |
| 2. காவியம் படைத்த கனவு | 04 |
| 3. நாற்காலி | 06 |
| 4. கடுகுக் கதை | 09 |
| 5. எண்ணங்களைக் கட்டுப்படுத்தலாம் | 10 |
| 6. அந்துவான் ஹென்றி பெக்கெரல் | 12 |
| 7. மாணவர் பக்கம் | 13 |
| 8. மாறியது நெஞ்சம் | 14 |
| 9. மனநலப் பாதிப்புகள் | 16 |
| 10. பார்வைகள் பலவிதம் | 18 |
| 11. ஒழுக்க நடத்தை விருத்தி | 19 |
| 12. உலகச் செய்திகள் | 21 |
| 13. சிற்பி | 22 |
| 14. அரசியல் | 24 |
| 15. வினாவிடைப் போட்டி | 26 |
| 16. திருஅவைச் செய்திகள | 27 |
| 17. போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஓய்வுநிலை ஆயர்

# அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை



**2008ம்** ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் திகதியன்று அப்போதைய திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியொன்று கிடைத்தது. 'அம்மறைமாவட்டத்தின் குருமுதல்வரும், மட்டக்களப்பு மண்ணின் புதல்வருமான அருட்பணி ஜோசப் பொன்னையா அடிகளார் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்' என்பதே அச்செய்தி. இதனைத் தொடர்ந்து மே மாதம் 04ம் திகதியன்று ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டு துணை ஆயராகக் கடமையேற்றார்.

ஜூலை மாதம் 03ம் திகதி 2012ம் ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டதாக திருத்தந்தை16ம் ஆசீர்வாதப்பரால் உரோமை நகரில் அறிவிக்கப்பட்டது. அத்துடன் அதன் முதல் ஆயராக பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை நியமனம் செய்யப்பட்டமையும் அறிவிக்கப்பட்டது.

கத்தோலிக்கப் பாரம்பரியம் மிக்க தன்னாமுனைப் பங்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான திரு. மத்தேஸ் பொன்னையா, திருமதி. மரியபூரணம் பொன்னையா தம்பதியினரின் மூன்றாவது மகனாக 1952 அக்டோபர் 12ம் திகதி இவர் பிறந்தார்.

தன்னாமுனை புனித. வளனார் வித்தியாலயத்தில் 1ம் வகுப்பு தொடக்கம் 7ம் வகுப்புவரை கல்வி பயின்ற ஆயர் அவர்கள் திருகோணமலை உப்புவெளி இளங்குருமடத்தில் இணைந்து கொண்டார். அத்துடன் திருகோணமலை புனித. சூசையப்பர் கல்லூரியில் இடைநிலை, உயர்நிலைக் கல்வியினை கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் திருச்சி புனித. பவுல் குருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று 1975ம் ஆண்டு மெய்யியல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து மேற்கு இந்தியாவின் பூனே நகரில் அமைந்துள்ள பாப்பிறைக் குருமடத்தில் இறையியல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு குருத்துவக் கல்வியினைப் பூர்த்தி செய்து கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலைப்பட்டத்தை 1990ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். தொடர்ந்து உரோமை நகர் சென்று விவிலிய இறையியல் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து உர்பான் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் நின்றுவிடாமல் கலாநிதிப் பட்டத்திற்காக கிறிஸ்தவ நாகரீகத் துறையில் தன்னை ஆராய்ச்சி மாணவனாக இணைத்துக்கொண்டு விவிலியத்தில் தூய பவுலின் கடிதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதில் வெற்றிகண்டு பகிரங்க வாதாடலுக்காக 2006ம் ஆண்டில் காத்துநின்றார். 2008ம் ஆண்டு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டதையடுத்து வேலைப்பழு காரணமாக வாதாடலைப் பூரணப் படுத்த இயலாமற் போயிற்று. ஆயராக நியமிக்கப்பட்டதையடுத்து உரோமாபுரியின் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப்பட்டத்தை அளித்தது.

இதற்கு முன்னர் (ஆயராக முன்னர்) கஷ்டப் பிரதேசப் பங்குகள் உட்பட பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். 2006ம் ஆண்டு காலப்பகுதியில் தாண்டவன்வெளி காணிக்கையன்னை ஆலயத்தில் கட்டிமுடிக் கப்பட்ட பிரமாண்டமான ஆலயம் அவரின் பணிக்கு எடுத்துக்காட்டு.

திருப்பெருந்துறை சிறிய குருமட மாணவர் கட்கு தொடர் பயிற்சிக்கான பொறுப்பினை 1993-1996ம் ஆண்டு காலப்பகுதியில் செவ்வனே நிறைவேற்றினார். 1996-2001ம் ஆண்டு காலப்பகுதியில் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் முதன்மை விவிலியப் பேராசிரியராகப் பணியாற்றினார். அத்துடன் உருவாக்குனராகவும் காணப்பட்டார். மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய அப்போஸ்தலிக்கப் பரிபாலகரான அருட்கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் மாணவ ராகவும், உருவாக்கப்பட்டவராகவும் காணப் படுகின்றார்.

இதைத் தவிர கிழக்குப் பல்கலைக்கழக ஒப்பீட்டுவியல் சமய ஆராய்ச்சித்துறையின் பகுதிநேர விரிவுரையாளராகவும், வருகை தரு விரிவுரையாளராகவும் ஆறு ஆண்டுகள் பணி புரிந்துள்ளார்.

ஜோசப் வாஸ் இறையியல் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். திருத்தூதர் பவுல், இறைவாக்கினர்கள், திருவெளிப்பாட்டு நூல் போன்றவை தொடர்பான பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

"கிறிஸ்துவின் நறுமணமாய் எங்கும் பரந்திட விளங்கிட" என்னும் விருது வாக்கியத்துடன் ஆயர் பணியில் தம்மை அர்ப்பணித்த தந்தை யவர்கள் 2014 ஆகஸ்ட் 29ம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்கள்.

நேர்மை, உண்மை, சளைக்காமை, இரக்கக் குணம், மன்னிக்கும் பக்குவம், அன்புள்ளம் கொண்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையவர்கள் அவரால் கட்டிமுடிக்கப்பட்ட சத்துருக்கொண்டான் இறை இரக்கத் திருத்தலம் போன்று பிரமாண்டமாய் நீடித்து நிலைத்து சுகவாழ்வு வாழ கிறிஸ்து இயேசு வரம் அருள வேண்டும் என்று மறை மாவட்ட பரிபாலகர், மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவிகள், இறைமக்கள் சார்பில் வேண்டுதல் செய்து நிற்கின்றது "தொண்டன் குடும்பம்".


**- ஆழியோன் -**

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா கிளர்ச்சியா- ளர்களின் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் லெபனானில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நூறைத் தாண்டியுள்ளது. கடந்த வாரம் ஹிஸ்புல்லாவின ரின் தொலைத்தொடர்பு சாதனங்கள் வெடித்துச் சிதறிய தால் நிலை தடுமாறிய ஹிஸ்புல்லா தற்போது இஸ்ரேல் மீதான தாக்குதலை முன்னெடுத்து வருகிறது. இஸ்ரேலின் தாக்குதலில் தங்களின் கமாண்டர் இறந்தாலும் அதனால் தங்களின் அமைப்பு ஒட்டுமொத்த மாக அழியும் என்று எண்ணிவிடக்கூடாது என்று ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நசரல்லா தெரிவித்துள் ளார். இந்நிலையில் தங்கள் மீதான தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ள ஹிஸ்புல்லா இதுவரை வடக்கு இஸ்ரேல் உள்ளிட்ட எல்லைப் பகுதி களிலேயே தாக்குதல் நடத்தியிருந்த நிலையில் தற்போது இஸ்ரேலின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் அந் நாட்டின் தலைநகர் டெல் அவிவ் மீது பேலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவியம் படைத்த கனவு

– சென்ற இதழின் தொடர்ச்சி....

**விடுதலையின் விழிப்பு**

தம் காலத்தில் இறைவனின் ஆட்சி நிறுவப்படும் என இஸ்ரயேலின் இளைஞர் நம்பினர். கடவுளின் அரசுக்கு எதிரானவை அகற்றப்பட்டு ஆண்டவரின் ஆவியால் யாவும் புதுப்பிக்கப்படும் என்பதை மனதார வாழ்ந்தனர். “இது எப்படி நிகழும்” (லூக் 1:34) என கேள்வி எழுப்பிய மரியாவைப்போன்று இவர்களும் தங்களுக்குத் தாங்களே கேள்வி எழுப்பி விழிப்புடன் காத்திருந்தனர்.

எப்படி நிகழும் என்பதை விட, ஒரு நாள் நிச்சயம் நிகழும் எனும் நம்பிக்கை விடுதலைக்கான விழிப்பை அதிகரித்தது; விடுதலைக்கான அர்ப்பணத்தை ஆழப்படுத்தியது; விடுதலை அவர்களின் மதிப்பைப் பெற்றிருந்தது.

முழுமையான சுதந்திரம் பெற அவர்கள் முன் விரிந்த பல வழிகள். தீவிரத்துடன் ஆயுதம் ஏந்திப் போரிடலாம்; அமைதியில் இறைவேண்டலில் ஈடுபடலாம்; காட்டில் புகுந்து கடுந்தவம் மேற்கொள்ளலாம். பாதைகள் பல! ஆனால் இலக்கு ஒன்றே ஒன்றுதான்; விடுதலை! அனைத்து இளைஞரின் இதயத்துள்ளும் பொதுவாக குடியமர்ந்தது விடுதலைக்கான விழிப்பு, ஏக்கம், தாகம்.

இறையனுவப அமைதி, அனுபவித்த யோசேப்பின் இதயத்திலும் எதிரொலித் திருக்க வேண்டும் விடுதலைக்கான வேட்கை. இதை அடையும் விதமாக அவர் தேர்தெடுத்த பாதை தவம் தவிர்த் தது; யுத்தம் விலக்கியது. ஆனால் விழிப்பை விதைத்த அமைதிப் பாதை இறைவேண்டலுடன் இணைந்தது.

வலியச்சென்று வன்முறையில் ஈடுபடு வதன் பின்விளைகளை யோசேப்பு அறிந் திருந்தார். தனித்த தவத்தின் தாக்கங் களையும் அவர் அறிந்திருக்கும் வாய்ப்பு உண்டு. எனவே கடவுளே கதி என படைத்தவரிடம் முறையிடுதல் மற்றும் அன்றாடக் கடமைகளை அர்ப்பணத்துடன் நிறைவேற்றுதல் இவ்விரண்டும் உரிய காலத்தில் கடவுளின் ஆட்சியை நிறுவும் என நம்பிய மக்கள் கூட்டத்தோடு தன்னையும் சேர்த்துக்கொண்டார். இவை அவ்வளவு எளிதானவை அல்ல. நிலைத்த நம்பிக்கையும் நீடித்த பொறுமையும் இதற்குத் தேவை. இவையே இறையாட் சிக்கான பற்றுறுதி, பணிவு, பிரமாணிக்கம்.

**இறையாட்சிக்கான பற்றுறுதி, பணிவு, பிரமாணிக்கம்.**

இறை திருவுளத்திற்கு முற்றிலும் கையளித்தல் பற்றுறுதி. இது இறையனுப வக் கனிகளில் ஒன்று. இறைவனே மனித எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவர். நாம் அவரது கரங்களில் கருவிகள் மட்டுமே என அர்ப்பணமாவது பணிவு. இடையூறுகள் எழுந்தாலும் இலக்கு நிச்சயம் கைகூடும் என நிலைத்து நிற்பது பிரமாணிக்கம். இவற்றின் மொத்த உருவம் யோசேப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைப்பருவத்தில் கடைப்பிடிக்கக் கடின மானது பணிவு. உடலில் சக்தியும் மனதில் திடமும் இளைஞரிடம் அதிகம் இருப்பதால் பணிவிற்குத் தேவை இருப்பதில்லை. எவராலும் நம்மை கட்டுப்படுத்த இயலாது; எவரும் நம்மைக் கட்டுப்படுத்தவும் கூடாது என்ற நிலைகள் இளமையில் மிஞ்சி நிற்பதால்தான் பணிவுடன் எதையும் அணுகுவதும் ஏற்பதும் இளைஞரால் இயலுவதில்லை. இவை இலக்குகளை அடைவ தற்கு தடைகள். அதுபோலவே வாழ்வின் யதார்த் தப் பக்கங்களை முழுமையாக பார்க்கவும் அனுமதியில்லை. விளைவாக வேகம் கூடும்; விவேகம் குறையும் அவசரம் அதிகரிக்கும்; அமைதி அகலும்; கடுங்கோபம் வெளிப்படும்; கண்ணியச் சீற்றம் மறையும்.

அதிகம் பேசாது அமைதி காத்த யோசேப்பு பணிவுடன் கடமைகளை ஆற்றியதால் கடவுளின் மகன் கல்வாரிக் கழுமரத்தை தன் தோள்களில் சுமக்கும் துணிவு பெற்றார். விளையும் பயிராக யோசேப்பின் பொறுப்பில் வளர்ந்த இயேசுவும் இறையாட்சிக் கனவுகளை அவரிடமிருந்தே கற்றி ருப்பார். தனது பட்டறையில் பொறுமையுடன் மரங்களை செதுக்கியபோல இயேசுவின் ஆளுமையைச் செதுக்கி பண்படுத்தியிருப்பார். குறிப்பிட்டுச் சொல்வதாயின், ஒரு மனிதக் குழந்தையை மானிட மகனாக உருமாற்றியதில் மரியாவிற்கு இணையான பங்கை யோசேப்பும் ஆற்றியிருப்பார். இவை இறையாட்சிக்கான பணிவு, பற்றுறுதி, பிரமாணிக்கத்தை இதயத் துள் சுமந்த யோசேப்பால் இயேசுவில் நிகழ்ந்தன. உறைவிடமும் உணவும் கொடுப்பதன்று தந்தைக்குரிய இதயம். தனது விழுமியங்ளை மகனில் விதைத்து மரமாக்குவதே தந்தை தன் மகனுக்கு ஆற்றும் கடமை. அதை யோசேப்பு சரிவரச் செய்ததால் விடுதலை வீரராக இயேசு உயர்ந்தார். கடுகு மணியென யோசேப்பு இயேசுவில் ஊன்றிய விதைகள் கல்வாரியில் மரமாக வளர்ந்து, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் வந்து தங்கும் அளவிற்கு அருங்கிளைகளைப் பரப்பி நின்றது (மாற்4:32). இத்தகைய தெளிவும் தீரமும் இன்றைய இளை யோரிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குத் தேவைப்படுவது இறையாட்சிக்கான பற்றுறுதி, பணிவு, பற்றுறுதி, பிரமாணிக்கம் என்பன.

**காவியம் படைக்கட்டும் இளமைக்கனவு**


தம்மோடு நின்றுவிடாமல, தம் சந்ததியும் தமக்குப்பின் தாம் ஆற்றிய அரும்பணிகளைத் தொடர்வதற்கான தெளிவையும் வீரத்தையும் இயேசுவிடமும் வளர்த்த தீரம் இன்றைய நம் இளைய தலைமுறைக்குத் தேவை. இறையாட்சிக்கான கனவு இயேசுவோடு புதைபடவில்லை; அது சீடரில் உயிர்த்தது. அவர்களின் உயிர்த்த தியாகத்தால் உலகின் மூலை முடுக்கெங்கும் முளைத்தது. இத்தகைய முனைப்பை இறையாட்சிக்கான இளையோரிலும் யோசேப்பு விதைக்கிறார். வீரிய விதைகளாக முளைப்பதும், தவிர்ப்பதும், கதிர்விடுவதும் இளைஞரின் கனவிலும் விழிப்பிலும் கடமை களைக் கருத்துடன் நிகழ்வதிலும் கனியும்.




"இந்த உடல் எனக்கு ஒரு விளக்கு;
என் உயிரே இந்த ஒளிக்கான தீ;
என் இரத்தமே எண்ணெய்;
இவை கொண்டு இறைவனைக்
காண்பதற்காகவே நான் வாழ்கிறேன்"
- கபீர்தாசர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நாற்காலி

- கி. ராஜநாராயணன் -

– சென்ற இதழ்த் தொடர்ச்சி......

ஒரு நாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள்.

நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்தபோது மாமனார் நாற்காலியில் அமர்க்களமாய் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். அவர் வெற்றிலை போடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதே சுவாராஸ்யமான பொழுதுபோக்கு. தினமும் தேய்த்துத் துடைத்த தங்க நிறத்தில் பளபள வென்றிருக்கும் சாண் அகலம், முழ நீளம், நாலுவிரல் உயரம் கொண்ட வெற்றிலைச் செல்லத்தை, 'நோகுமோ நோகாதோ' என்று அவ்வளவு மெல்லப் பக்குவமாகத் திறந்து, பூஜைப் பெட்டியிலிருந்து சாமான்களை எடுத்து வைக்கிற பதனத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வெளியில் வைப்பார். வெற்றிலையை நன்றாகத் துடைப்பாரே தவிர, காம்புகளைக் கிள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. (அவ்வளவு சிக்கனம்!) சில சமயம் மொறசல் வெற்றிலை அகப்பட்டுவிட்டால் மட்டும் இலையின் முதுகிலுள்ள நரம்புகளை உரிப்பார். அப்பொழுது நமக்கு, 'முத்தப்பனைப் பிடிச்சு முதுகுத்தோலை உறிச்சி பச்சை வெண்ணையைத் தடவி... என்ற வெற்றிலையைப் பற்றிய அழிப்பாங்கதைப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

களிப்பாக்கை எடுத்து முதலில் முகர்ந்து பார்ப்பார். அப்படி முகர்ந்து பார்த்துவிட்டால் 'சொக்கு' ஏற்படாதாம். அடுத்து அந்தப் பாக்கை ஊதுவார் அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத பாக்குப் புழுக்கள் போகவேண்டாமா அதற்காக, ஆரம்பத்தில் மெதுவாக ஆரம்பிக்கும் இந்த முகர்ந்து பார்த்தலும் ஊதலும் வரவர வேகமாகி ஒரு நாலைந்து தடவை மூக்குக்கும் வாய்க்குமாக, கை மேலும் கீழும் உம் உஷ், உம் உஷ்' என்ற சத்தத்துடன் சுத்தமாகி டபக்கென்று வாய்க்குள்சென்றுவிடும்.

ஒருவர் உபயோகிக்கும் அவருடைய சுண்ணாம்பு டப்பியைப் பார்த்தாலே அவருடைய சுத்தத்தைப் பற்றித் தெரிந்துவிடும். மாமனார் இதிலெல்லாம் மன்னன். விரலில் மிஞ்சிய சுண்ணாம்பைக் கூட வீணாக மற்றப்பொருள்களின் மேல் தடவமாட்டார். அவருடைய சுண்ணாம்பு டப்பியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம். பதினைந்து வருஷத்துக்கு முன் வாங்கிய எவரெடி டார்ச் லைட் இன்னும் புத்தம் புதுசாக இப்போதுதான் கடையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“ அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே? ”**

வாங்கிக்கொண்டு வந்ததோ என்று நினைக்கும்படியாக உபயோகத்தில் இருக்கிறது அவரிடம். அதோடு சேர்த்து வாங்கிய எங்கள் வீட்டு டார்ச் லைட் சொட்டு விழுந்து நெளிசலாகி மஞ்சள் கலரில் பார்க்கப் பரிதாபமாக, சாகப் போகும் நீண்ட நாள் நோயாளியைப் போல் காட்சியளிக்கிறது.

நாற்காலியை அவர் தவிர அந்த வீட்டில் யாரும் உபயோகிக்கக் கூடாது. காலையில் எழுந்திருந்ததும் முதல் காரியமாக அதைத் துடைத்து வைப்பார். ஓர் இடத்திலிருந்து அதை இன்னோர் இடத்துக்குத் தாமே மெதுவாக எடுத்துக்கொண்டுபோய்ச் சத்தமில்லாமல் தண்ணீர் நிறைந்த மண்பானையை இறக்கி வைப்பது போல் அவ்வளவு மெதுவாக வைப்பார்.

மாமனார் என்னைக் கண்டதும், “வரவேணும் மாப்பிள்ளைவாள்” என்று கூறி வரவேற்றார்.

“கொஞ்சம் வெற்றிலை போடலாமோ?” என்று என்னைக் கேட்டுவிட்டுப் பதிலும் அவரே சொன்னார்: “படிக்கிற பிள்ளை வெற்றிலை போட்டால் கோழி முட்டும்!”

அம்மா சொல்லியனுப்பிய தகவலை அவரிடம் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

ராத்திரி அகாலத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டில் எல்லாம் அயர்ந்த தூக்கம். நான் பெத்தண்ணாவை எழுப்பினேன்.

நாற்காலிக்காக வந்த ஒரு இழவு வீட்டுக்காரர்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். பெத்தண்ணா அவர்களைத் தெருப்பக்கம் அழைத்துக்கொண்டு போனான். நானும் போனேன். வந்த விஷயத்தை அவர்கள் சொல்லி முடித்ததும், பெத்தண்ணா அவர்களிடம் நிதானமாகப் பதில் சொன்னான்.


“நாற்காலிதானே? அது எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது. அங்கே போய்க் கேளுங்கள், தருவார். நாங்கள் சொன்னதாகச் சொல்ல வேண்டாம். இப்படிக் காரியங்களுக்கு இல்லை என்று சொல்ல முடியுமா? அங்கே கிடைக்காவிட்டால் நேரே இங்கே வாருங்கள் அப்புறம் பார்த்துக்கொள்வோம்” என்று பேசி அவர்களை அனுப்பிவிட்டு, வீட்டுக்குள் வந்து இருவரும் சப்தமில்லாமல் சிரித்தோம்.

அப்பா தூக்கச் சடைவோடு படுக்கையில் புரண்டுகொண்டே,

“யார் வந்தது?” என்று கேட்டார்.

“வேலை என்ன? பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்” என்றான் பெத்தண்ணா.

துப்பட்டியை இழுத்துப் போர்த்திக் கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டார் அப்பா.



இப்பொழுது மாமனார் காட்டில் பெய்து கொண்டிருந்தது மழை!

ரொம்ப நாள் கழித்து, நான் மாமனாரின் வீட்டுக்கு ஒரு நாள் போனபோது அவர் தரையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடனும் பேச்சுடனும் என்னை வரவேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இப்படிக் கீழே? நாற்காலி எங்கே?" சுற்று முற்றும் கவனித்தேன். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே என்னை ஆழ்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். பின்பு அமைதியாக, "அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?" என்றார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும்போது இந்தச் செய்தியைச் சொல்லப் பெத்தண்ணாவிடம் வேகமாக விரைந்தேன். ஆனால் வரவர என்னுடைய வேகம் குறைந்து தன் நடையாயிற்று.

- **முற்றும்**



## கருப்பு மழை

பிரேசிலைச் சேர்ந்த 44 வயதான கால்நடை பண்ணை உரிமையாளர் டியாகோ க்ளூக், கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஒன்றை முயற்சிக்க முடிவு செய்தார். கருப்பு மழை என்று அழைக்கப்படும் ஒரு நிகழ்வு பற்றிய எச்சரிக்கைகள் அப்போது வழங்கப்பட்டிருந்தன. தெற்கு பிரேசிலிய நகரமான பெலோடாஸில் உள்ள தனது வீட்டின் பின் புறத்தில் உள்ள தோட்டத்தின் மையத்தில் ஒரு சுத்தமான வெள்ளை வாளியை வைத்தார். "இந்த வாளியில் சேகரிக்கப்படும் நீர், கூரைகள் அல்லது சுவர்களில் இருந்து விழாமல், மேகங்களிலிருந்து நேரடியாக விழுவதற்காக வெகு தொலைவில் இருக்கும் ஒரு இடத்தை நான் தேர்ந்தெடுத்தேன்", என்று க்ளூக் விளக்குகிறார். அடுத்த நாள் அவர் வாளியைப் பார்த்த போது, அதில் சேகரிக்கப்பட்ட மழைநீர் கருப்பு நிறத்தில் இருந்தது. "நான் இது போன்ற எதையும் பார்த்ததில்லை. இது மிகவும் வருத்தமாக இருந்தது," என்று அவர் பிபிசி நியூஸ் பிரேசிலிடம் கூறினார்.

மெட்சுல் வானிலை மைய ஆய்வாளர் எஸ்டேல் சியாஸ் கருப்பு மழை என்பது, புகையால் கொண்டு வரப்படும் புகைக்கரியுடன் நீர் கலக்கும் போது உருவாகும் என்று விளக்குகிறார்.

## அன்புடன் உங்களோடு .....

... தயாராகும் பாதுகாவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்கள் ஆகும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் வாக்கிற்கமைய சிறுவயதிலே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகிறது.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்டோபர் மாதம் 1ம் திகதியிலே நினைவுகூரப்படுகின்றன. சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகளாக வகைப் படுத்தப்பட்டுள்ளவை பின்வருமாறு அமைகின்றன.

1. வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை.
2. பிறப்பின்போது பெயரொன்றையும், இன அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளும் உரிமை.
3. பெற்றோரைத் தெரிந்துகொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்குமான உரிமை.
4. பெற்றோரிடமிருந்து தம்மைத் தனிமைப்படாதிருப்பதற்கான உரிமை.
5. கருத்தை வெளிப்படுத்தும் உரிமை.
6. சிந்திப்பதற்கும் மனச்சாட்சிப்படி நடப்பதற்கும் சமயமொன்றைப் பின்பற்றுவதற்குமான உரிமை.
7. சமூக உரிமை, தனியுரிமை, சுகாதார வசதிகள் பெறும் உரிமை.
8. போதிய கல்வியைப் பெறும் உரிமை.
9. பொருளாதார சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை.
10. பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாக்கும் உரிமை.
11. சித்திரவதை/ கொடூரமாக நடத்துதல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை.
12. சாதாரண வழக்கு விசாரணைக்குரிய உரிமை.
13. சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை.

இவ்வாறு பல்வேறு உரிமைகள் சிறுவர் உரிமைத் தொடர்பில் பட்டியலிடப்படுகின்றது. நாளைய தலைவர்களாக வரவேண்டிய இன்றைய இளம் சிறார்களை அவர்களைச் சுற்றியுள்ள பொறுப்புதாரர்கள் அனைவரும் தமக்குரிய வகிபாகத்தை சரிவர நிறைவேற்றி சிறந்ததொரு சந்ததியை எதிர்காலத்தில் எதிர்பார்ப்போம்.

"மகத்துவம் மிக்கதோர் சிறுவர் சமுதாயத்தினை உருவாக்குவோம்"

ஆசிரியர்
அருட்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாக்களிப்பு

**கடுருக்கதை – 136**

அன்ரன் வாக்களிக்க வெளிக்கிட்டு கொண்டிருந்தார். அவருடன் அவரின் மனைவியும் ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தார். காலையிலேயே வாக்களிக்கச் செல்ல வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வுடன் அவர்கள் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அன்ரனுக்கு ஏற்கனவே ஓர் அனுபவப் பாடம் இருந்தது. முதலாவது மாகாணசபைத் தேர்தல்: அன்ரன் திருமணம் செய்யவில்லை. பின்னேரம் இரண்டு மணியளவில் அன்ரனும், ஜெயாவும், ரெட்ணகுமாரும், ஜீவாவும் வாக்குச் சாவடியில் வரிசையில் நின்றார்கள். பக்கத்து வரிசை பெண்களுக்கானது அவ்வரிசையில் அம்மாமார், அக்காமார், தங்கச்சிமார் எல்லாரும் வாக்களிக்க ஆயத்தமாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். தங்கச்சிமார் என்றால் ஒன்பதாம், பத்தாம் வகுப்பு படிப்பவர்கள். அவர்களுக்கு எப்படி வாக்குரிமை கிடைத்தது என்று அன்ரனுக்கு ஆச்சரியம்.

சத்தமாய் கதைக்க இயலாது பக்கத்து நாட்டுப் படையினர் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்கள் சின்ன விரலில் ஊதா நிற மை தடவியுள்ளதை காட்டி தங்கருக்குள் சிரித்துக்கொண்டு போனார்கள்.

அடுத்தது அன்ரனின் முறை: அங்கேயிருந்த சிப்பாய் ஒருவர் முன்னே வந்து,

“வாக்கு எல்லாம் முடிஞ்சு போயிற்று: எல்லாம் போங்க” என்று சொன்னார்.

“என்னடா.... தியேட்டரில் டிக்கட் முடிஞ்சு சொல்லுறாப்போல கிடக்கு...” என்று ஜெயா சொன்னான்.......

“அப்பா..... என்ன போறலயா?” என்று அன்ரனின் மகன் தட்டிக்கேட்டான்.

“ஒண்டுமில்ல மகன் பழைய ஞாபகம் தான்...” என்றார் அன்ரன்.

“அப்பா எனக்கொரு சந்தேகம்”

“என்ன மகனே...?”

“எலக்சன் கேக்கிற ஆக்களுக்கு சப்போட்டர்களுக்கு மட்டுமா பார்பேமிட்? வோட் போடுற ஆக்களுக்கு எல்லாம் பார்பேமிட் இல்லையா அப்பா....?”

“டேய் சத்தம் போடாத பொடியா....? என்றார் அன்ரன்.




## ஏவுகணையைப் பயன்படுத்த ரஷ்யா எதிர்ப்பு


யுக்ரேனில் பல நகரங்கள் ரஷ்ய குண்டு வீச்சுக்கு தினமும் இலக்காகின்றன. யுக்ரேனின் இராணுவ தளங்கள், குடியிருப்புகள் மற்றும் மருத்துவ மனைகள் மீது ரஷ்யா ஏவுகணைகள் மற்றும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதல்களை நடத்த ரஷ்யா பயன்படுத்தும் ராணுவத் தளங்களை தாக்க அனுமதி தராமல் இருப்பது, போரில் கையை பின்னால் கட்டிக் கொண்டு பணிந்து செயல்படுவதற்கு ஒப்பானது என்று யுக்ரேன் கூறுகிறது. போர்க்களத்தில் ரஷ்யாவை சமாளிக்க ஸ்டார்ம் ஷாடோ ஏவுகணை போன்ற நீண்ட தூர ஏவுகணைகளையும், அமெரிக்காவின் ATACM போன்ற 300 கிலோமீட்டர் தூரம் வரை தாக்கும் ஏவுகணை அமைப்புகளையும் பயன்படுத்தி ரஷ்ய எல்லைக்குள் தாக்குதல் நடத்த அனுமதிக்குமாறு யுக்ரேன் கோரி வருகின்றது.

## தவிக்கும் மாணவர்கள்

காஸாவில் போர் ஆரம்பித்து முதலாம் ஆண்டு முடிவடைய உள்ள நிலையில், கல்வியின்றி மாணவர்கள் தத்தளித்து வருகின்றனர். இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காஸாவில் 70% பள்ளிகள் சேதமடைந்துள்ளன. மேலும் 6,25,000 மாணவர்கள் எந்தவிதமான கல்வி சேவையுமின்றி போர்ச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்தப் போர்ச் சூழல் ஒரு நாள் முடிவுக்கு வரும் என்று நம்பிக்கை வைத்துத் தாங்கள் வாழ்ந்த பகுதியில் விட்டுச் சென்ற புத்தகங்கள், நோட்டுகள் போன்றவற்றைத் தேடிச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவாக ஓரிடம் விட்டு மற்றோர் இடத்திற்கு நகரும் ஆசிரியர்கள் தங்களால் இயன்ற அளவு அங்குள்ள மாணவர்களுக்கு கல்வியைக் கற்றுக் கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எண்ணங்களைக் கட்டுப்படுத்துவோம்!

ஜே. எச். இரத்தினராஜா



நம் மனதில் இரு வகையான எண்ணங்களே தோன்றுகின்றன. நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்கள். இவ்வகையான எண்ணங்கள் ஒவ்வொன்றும் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றிய கருத்துக்கள் எழுத்தாளர்களான எமர்சன், ஜேம்ஸ் ஆலன், சுவாமி சிவானந்தர், வேதாத்திரி மகரிஷி, டாக்டர்.எம்.எஸ். உதயமூர்த்தி ஆகியோரின் நூல்களிலிருந்து பெறப்பட்டவையாகும். இவைகள் நடைமுறைக்கு ஏற்ற வகையில் எளிமைப்படுத்தி தரப்பட்டுள்ளன.

நம் எண்ணங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் தீய எண்ணங்களை நமது இதயத்திலிருந்து அகற்றி விடுவோமானால், முதலாவது நன்மையாக நாம் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றுவிடலாம். இவை ஏதோ அறிவுரை அல்ல. கடந்த 20, 30 ஆண்டுகளில் நாம் எந்தெந்த எண்ணங்களால் வளர்ந்துள்ளோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உண்மை பளிச்சென்று தெரியும்.

இங்கு தரப்படும் எண்ணங்கள் பற்றிய கருத்துகளை ஒவ்வொன்றாகப் படியுங்கள். ஒவ்வொரு கருத்துக்கும் ஒரு சிறிய இடைவெளி விட்டு, உங்கள் எண்ணங்களோடு இக்கருத்துகளை இணைத்துப் பாருங்கள். எடுத்த எடுப்பிலேயே சில கருத்துகள் உண்மையென உணர்வீர்கள். இரண்டு மூன்று தடவை இதனைப் படித்துப் பாருங்கள். எண்ணங்களுக்கு ஆற்றல் உண்டு என்பதை உணர்வீர்கள். உங்களுக்கான நல்ல எண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள். அதனை நடைமுறைப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

### எண்ணங்களின் தோற்றம்

மனதின் அடித்தளத்தில் அமைந்துள்ள பதிவுகளிலிருந்து எண்ணங்கள் தோன்றுகின்றன. இவை இயல்பாகத் தோன்றும் எண்ணங்களாகும்.

- நடைமுறை வாழ்க்கையில் தோன்றும் எண்ணங்கள்.
- அறிகுறியால் தோன்றும் எண்ணங்கள்.
- இயல்பான உணர்ச்சியால் தோன்றும் எண்ணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கேள்வியால் தோன்றும் எண்ணங்கள்.
  காட்சியால் தோன்றும் எண்ணங்கள்.
- பழக்கத்தின் காரணமாகத் தோன்றும் எண்ணங்கள்
- சிந்திப்பதன் காரணமாகத் தோன்றும் எண்ணங்கள்

**எண்ணங்கள் பதிவாகும் இடங்கள்**

நாம் வெளிப்படுத்தும் எண்ணங்கள் விண்வெளியில் பதிவாகின்றன.

எண்ணங்கள் நம் மனத்திரையில் பதிவாகின்றன.

எண்ணங்கள் நம் முகத்திரையில் பதிவாகின்றன

எண்ணங்கள் நம் கண்களில் பதிவாகின்றன.

**எண்ணங்களை வகைப்படுத்தல்**

மனதில் தோன்றும் எண்ணங்களை குறித்து வைத்துக்கொண்டு பாகுபடுத்தி ஆராய வேண்டும். எண்ணம் உருவாக ஒரு பின்னணி வேண்டும். நாம் அடைய விரும்பும் இலட்சியத்தைப் படமாகப் பார்க்கும் கற்பனைத்திறன் வேண்டும்.

**தீய எண்ணங்களால் ஏற்படும் விளைவுகள்**

மனம் வெற்றிடமாக இருக்கும்போது தீய எண்ணங்கள் தோன்றுகின்றன.

எதையும் காம இச்சையோடு பார்க்கும்போது தீய எண்ணங்கள் தோன்றுகின்றன.

பிறரைக்குறை கூறும்போது அந்த எண்ணங்களால் குறை கூறியவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

மனம் ஓய்ந்திருக்கும்போதும், சோர்ந்திருக்கும் போதும் தீய எண்ணங்கள் நுழைந்து விடுகின்றன. தீய எண்ணங்கள் தீமையையே விளைவிக்கின்றன. முரண்பட்ட எண்ணங்கள் முரண்பட்ட விளைவுகளையே உண்டாக்குகின்றன. எண்ணங்களால் பற்றும் பற்றினால் ஆசையும், ஆசையால் கோபமும் உண்டாகின்றது.

**எண்ணங்களைக் கட்டுப்படுத்தும் முறை**

எண்ணங்களைக் கட்டுப்படுத்த அளவு கடந்த முயற்சியும், பொறுமையும் தேவை. தேவைகளையும் குறைப்பதால் மட்டுமே எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியும். எண்ணத்தை வெல்வது என்பது நம்மிடம் உள்ள குறைகளை வெல்வது ஆகும்.

இறைவழிபாட்டால் எண்ணங்களைக் கட்டுப்படுத்தலாம்.

தியாகங்கள் செய்வதால் எண்ணங்களைக் கட்டுப்படுத்தலாம்.

முறையான பழக்க வழக்கங்களால் எந்த வகையான எண்ணங்களையும் கட்டுப் படுத்தலாம்.

எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தீய எண்ணங்களிலிருந்து விடுபட முயல்வோம்.




## மரித்த கோப்பை

ஜென் குரு இக்கியு ஒரு மடாலயத்தில் மாணவனாக இருந்த போது நடந்த கதை இது. அவரது குரு புராதனமான தேநீர் கோப்பை ஒன்றை அரும்பொருளாக வைத்திருந்தார். ஒரு நாள் சிறுவன் இக்கியு அந்தக் கோப்பையை உடைத்து விட்டான். தனது குரு வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டவன், கோப்பையின் துண்டுகளைப் பொறுக்கி கையில் வைத்துக் கொண்டான். குரு அந்த அறையில் தோன்றியவுடன், "மனிதர்கள் ஏன் மரிக்க வேண்டும்" என்று கேள்வி கேட்டான் இக்கியு.


"அது இயற்கையானது....." என்றார் குரு. மேலும் அவர், "நன்றாக வாழ்வது எத்தனை அவசியமோ அதைப் போலவே ஒவ்வொன்றும் மரிப்பதும் அவசியம்" என்றார். உடனே இக்கியு, "இந்த புராதனக் கோப்பைக்கும் சாகும் நேரம் வந்துவிட்டது" என்று கையைத் திறந்து காண்பித்தான்.

"பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கப் போவதாகக் கருதி வாழ்க்கையை நடத்த வேண்டாம். மரணம் நிச்சயம் இன்றோ, நாளையோ அது எப்போதும் வரக் காத்திருக்கின்றது என்பதை உணர்ந்து, உயிருள்ளபோதே நல்லவனாக இரு!"

– மார்க்ஸ் அரேலியஸ்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அந்துவான் ஹென்றி பெக்கெரல்

## Antoine Henri Becquerel

(டிசம்பர் 15, 1852 - ஆகஸ்ட் 25, 1908)

அந்துவான் ஹென்றி பெக்கெரல் ஒரு பிரான்சிய இயற்பியலாளர் ஆவார். கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தமைக்காக இவருக்கு 1903 இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கதிரியக்கத்தின் எஸ்.ஐ முறை அலகுக்கு இவரது நினைவாக பெக்கெரல் (Bq) எனப் பெயர் சூட்டப்பட்டது.

பெக்கெரல் பாரிசு நகரத்தில் பிறந்தவர். இவர் மற்றும் இவரது மகன் சீன் உட்பட நான்கு தலைமுறை அறிவியலாளர்களை இவரது குடும்பம் பெற்றுள்ளது.

1892 ஆம் ஆண்டில் பிரான்சின் தேசிய அரும்பொருட் காட்சி சாலையில் இயற்பியல் பிரிவின் தலைவராகவும் பின்னர் 1894இல் மேம்பாலங்கள் மற்றும் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் பொறியியலாளராகவும் ஆனார். பெக்கெரல் 1896 இல் யுரேனியம் உப்புக்களில் ஒளிர்வை *(phosphorescence l)* ஆராயும் போது தற்செயலாக கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார். வில்லெம் ரோண்ட்கனின் கண்டுபிடிப்புகளை ஆராயும் ஒரு சோதனையில், பெக்கெரல் ஒளிப்பாயப் பொருளான பொட்டாசியம் யூரனைல் சல்பேற்றை ஒளிப்படத் தட்டுக்களில் *(photographic plates)* வைத்து, தட்டுகளை கருப்புக் காகிதத்தினால் சுற்றி வைத்து சூரிய ஒளியை செலுத்தினார். ஆனாலும் பரிசோதனை தொடங்க முன்னரே புகைப்படத் தட்டுக்கள் முழுமையாகப் பாதிப்படைந்ததை *(exposed)* அவதானித்தார். யுரேனியமும் அதன் உப்புக்களும் கண்ணிற்குப் புலப்படாத கதிர்வீச்சுக்களை உமிழ்கின்றன என்றும் அவை காகிதம், மரம், கண்ணாடி போன்றவற்றின் வழியே ஊடுருவி ஒளித்தட்டைப் பாதிக்கின்றன என்றும் கண்டறிந்தார்.

1903, மேரி கியூரி மற்றும் பியேர் கியூரி ஆகியோருடன் சேர்த்து இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1908 இல் பெக்கெரல் அறிவியல் கழகத்தின் நிரந்தர செயலாளராக நியமிக்கப்பட்டார். ஆனாலும் அதே ஆண்டில் தனது 55வது அகவையில் காலமானார்.

இவர்,

- ரம்ஃபோர்ட் விருது (1900)
- ஹெல்ம்ஹோல்ட்ஸ் விருது (1901)
- இயற்பியலுக்கான நோபல் பரிசு (1903)
- பார்னார்ட் விருது (1905)

போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## பொதுத் தகவல்கள்

1. பாறைகளைப் பற்றிய படிப்புக்கு **பெட்ராலஜி** என்று பெயர்.
2. வெள்ளை யானைகளின் நிலம் என்றழைக்கப்படுவது **தாய்லாந்து**.
3. மலைகளின் நிலம் என்றழைக்கப்படுவது **மியான்மர்**.
4. மணலின் வேதியியல் பெயர் **சிலிகான் - டை - ஆக்ஸைடு**.
5. மண்புழுவுக்கு **ஐந்து** இதயங்கள் உள்ளன.
6. மிக வெப்பமான கோள் **வெள்ளி**.
7. உலகில் 2000 வகையான பாம்புகள் உள்ளன.
8. சூரிய ஒளி பூமியை வந்தடைய **8.3 நிமிடங்கள்** ஆகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம் க.பொ.த. உயர்தரம்

# மாணவர் பக்கம்



- நில்மினி கஜேந்திரன்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

தொடர் XXVII

**மாணவர் பக்கம்**
செப்டெம்பர் - 2024
விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 1 | 5) 3 | 9) 1 |
| 2) 1 | 6) 3 | 10) 2 |
| 3) 1 | 7) 3 | |
| 4) 2 | 8) 3 | |

1. புனித ஜெரோம் குருத்துவத்தைப் பெற்ற பின் கொன்ஸ்தாந்துநோபிளுக்கு வந்து திருநூல்களை யாரிடம் கற்றார்?
   1. நாசியானின் கிரகோரிடம் 2. புனித ஜஸ்டினிடம் 3. அலெக்சாந்திரியா சிறிலிடம்
   4. புனித அகுஸ்தினாரிடம் 5. புனித அத்தனாசியாரிடம்

2. திருவிலியத்தில் குறிப்பிடப்படாத எல்லா நம்பிக்கைகளையும் நிராகரித்தவர்:
   1. மாட்டீன் லூதர் 2. பெலாஜியஸ் 3. அகுஸ்தீன் 4. ஜோன் கல்வின் 5. சாள்ஸ் வெஸ்லி

3. திருத்தந்தை 7வது கிளமெண்ட் அவர்களால் நிராகரிக்கப்பட்ட இங்கிலாந்து 8ம் ஹென்றி மன்னனின் வேண்டுகோள் என்ன?
   1. உரோமைப் பயணம் 2. ஜெருசலேம் விவாதம் 3. திருமுழுக்கு
   4. விவாகரத்து செய்தல் 5. திருத்தந்தை இலங்கை வருகை

4. திரிதெந்தீன் திருசங்கம் மூலம் முன் வைக்கப்பட்ட மறுமலர்ச்சித் திட்டம் என்ன?
   1. நேர்த்தி செய்தல் 2. திருமுழுக்கு வழங்கல் 3. நற்கருணை பெற ஊக்குவித்தல்
   4. தான தருமம் செய்தல் 5. திருயாத்திரை செல்லல்

5. திருச்சபையின் பிரதான பண்பாய் அமைவது எது?
   1. பக்தி 2. பண்பாடு 3. திருப்பலி 4. பரிசுத்தம் 5. மகிமை

6. மனிதனின் சொந்தத் தாய் நாட்டை எந்தப் பகைவர்களாலும் முற்றுகையிடமுடியாது என்பதை புனித அகுஸ்தீனார் எடுத்துக்காட்டிய நூல்:
   1. இருண்ட யுகம் 2. இருண்ட இரவு 3. அவணியில் அமைதி
   4. இறைவனின் நகரம் 5. இன்றைய உலகில் திருச்சபை

7. கி.பி 5ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கிறிஸ்தவ துறவற மரபுகளை ஒழுங்கு முறை செய்த கத்தோலிக்க துறவியர் இருவர்.
   1. தூய ஆசீர்வாதப்பர், தூய பத்திரிசியார் 2. தூய அகுஸ்தீன், தூய பசில்
   3. தூய இன்னாசியார், தூய மாட்டீன் 4. தூய அகுஸ்தீன், தூய ஜெரோம்
   5. தூய செயஸ்தியார், தூய மாட்டீன்

8. கி.பி 6ம் நூற்றாண்டில் அயர்லாந்தில் திருமறையை போதித்து கடும் தவ வாழ்வை அறிமுகப்படுத்தியவர்.
   1. புனித பசில் 2. புனித வேணடேற் 3. புனித பெற்றிக்
   4. புனித அக்குவைனஸ் 5. புனித ஜெரோம்

9. 'கிரகோரியன் சான்று' எனும் புதிய இசை முறையினை திருப்பலியில் இணைத்தவர்:
   1. புனித ஜெரோம் 2. புனித மாட்டீன் 3. புனித பசில்
   4. திருத்தந்தை கிரகோரி 5. திருத்தந்தை பெனடிக்

10. 10ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஜேர்மனியப் பேரரசுகளினால் நியமிக்கப்பட்ட திருந்தையர்கள் மிகவும் நல்லவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருந்தனர். இவர்களுள் சிறந்தவர்:
    1. திருத்தந்தை 1ம் பவுல் 2. திருத்தந்தை 2ம் சில்வெஸ்டர்
    3. திருத்தந்தை ஜோன் பவுல் 4. திருத்தந்தை 1ம் ஆசீர்வாதப்பர்
    5. திருத்தந்தை சிங்கராயர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






- ந. பார்த்தீபன் -
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.


# மாறியது நெஞ்சம்

"அவள் நிர்வாணத்தை விற்கிறாள்.
ஆடை வாங்குவதற்காக..."

என்று முகத்தில் அடிக்கும் புதுக்கவிதை போல அல்லி கூறி மனோகரனைத் திருப்பி அனுப்பியதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக ஒருத்தருக்கும் சந்தேகம் எழாத வகையில் எவ்வளவு நெருக்கமாகப் பழகியவள், இன்று.......

மனோகரன் திருமணம் செய்து மனைவியுடன் வாழும் வீட்டிற்கு அருகில் வாடகைக்கு வந்து குடியிருந்தவள் காலப்போக்கில் மனோகரனின் உள்ளத்திலும் குடிபுகுந்தாள்.

கேட்டாலும் உதவிசெய்யத் தயங்கும் இந்நாட்களில் கேட்காமலே உதவிசெய்யத் தயங்காத மனோகரனின் இயல்பு அல்லிமலரைக் கவர்ந்து கொண்டது.

திருமணமானவன் என்பது தெரிந்ததால் ஓர் எல்லையோடுதான் பழகினாள். ஆனால் மனோகரனின் கவரும் தோற்றமும் பழகும் விதமும் கொஞ்சம் கொஞ்சமாக அவளை அவன்பால் நெருக்கமாக்கியது.

மனோகரனின் மனைவியும் வேலைக்குப் போய்வருவதால், சில நேரங்களில் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களுக்கு உதவுவதில் அல்லி பின்நிற்பதில்லை.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் மனோகரனுடனான சந்திப்புகள் அல்லிக்குப் பிடித்திருந்தது.

அயல் வீடு என்பதால் யாரும், ஏன் வீட்டில் உள்ளோர் கூட அவர்கள் மேல் சந்தேகம் கொள்ளவில்லை.

"அல்லி நல்ல பிள்ளை, என்னப்பா....." என்று மனைவி கூறும்போது,

"ஓமப்பா, பாவம் திருமணம் தான் அவளுக்குத் தள்ளிப் போகுது...." என்று மனோகரனும் கதைப்பதுண்டு.

மனோகரனுடன் ஏற்பட்ட பழக்கத்தில் அல்லி புதுப் பொலிவுடன் காணப்பட்டாள்.

அவளுடைய பெற்றோர் 'அல்லிக்கு ஒரு கலியாணம் சரிவந்துள்ளது' என்று சொன்ன




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போது, மனோகரன் குடும்பமும் மிகவும் சந்தோசப்பட்டது.

என்ன, இரண்டு இலட்சம் ரூபா கடனாகக் கேட்டபோது இருவரும் மனமொத்து அந்த உதவியைச் செய்தனர்; திருமணமும் சிறப்பாக நடந்தேறியது.

ஒருமாதம் நின்றுவிட்டு ஆறு மாதத்துக்குள் கூப்பிடலாம் என்று நம்பிக்கை கொடுத்துவிட்டு கணவன் பிரான்சிற்குப் போய்விட்டான்.

மனோகரன் குடும்பம் செய்த உதவியை அல்லியின் பெற்றோர் தங்கள் உறவுகளுக்கு தெரியப்படுத்தி, அதை அடிக்கடி சொல்லிக் கொள்வர்.

"தம்பி உங்களுக்கேதும் அவசரமென்றால் சொல்லுங்க.... நாங்க ஏதாவது வழிபண்ணி காசைத் தருவம்....." என்று அல்லியின் பெற்றோர் கூறிய போது,

"இல்லையில்லை..., அல்லி செய்த உதவிக்கு..." என்று மனோகரனின் மனைவி சொல்ல, மனோகரனும் அதை ஆமோதிப்பது போல சிரித்துக் கொள்வான்.

மீண்டும் ஒரு நாள் மனைவி இல்லாத வேளையில் மனோகரன் அல்லியை அழைத்து தனது இச்சையைத் தீர்க்க முற்பட்டான்.

"பிளீஸ் விடுங்கோ.... நான் அவருக்கு இனித் துரோகம் செய்யமாட்டன்..."

மனோகரனுக்கு எதிர்பார்க்காத அடி.

"நாங்க முன்பு பழகியதுபோல ..."

மனோகரன் தயங்கித் தயங்கிக் கூறுகிறான்.

அல்லி "அது நான் தனியாளாக இருந்தபோது... இப்ப நான் ஒருவருக்கு மனைவி. என்னில் நம்பிக்கை வைக்கும் ஒருவர் எனக்கு இருக்கிறார்."

மனோகரன், "அப்பவும் நான் தனியாளில்லையே....."

அல்லி, "நீங்க உங்கடை மனைவிக்குத் துரோகம் செய்தது போல நான் என்ரை கணவனுக்குத் துரோகம் செய்ய விரும்பேல்லை."

"இதிலயென்ன துரோகமிருக்கு...?" மனோகரன் கொஞ்சம் சினத்துடன் கேட்கிறான்.

"இருக்கு ... அவர் என்னை நம்புகிறார். இனி நான் அவருக்கானவள் என்று நினைத்துத்தான் ஆறுமாதத்துக்குள் எடுப்பன் என்று கூறிச் சென்றார். நான் அவருக்கானவள் என்றபின்... இது தப்பு. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்க" என்று கூறிவிட்டு தன் வீட்டிற்குப் போகிறாள்.

அப்ப தான் தன் மனைவிக்கு...

நான் வேறு அல்லி வேறுதான் .... என்பதை உணரும் போது ...

ஆணின் சிந்தனை வேறு, பெண்ணின் சிந்தனை வேறு என்பது ஜீரணிக்க வேண்டிய விடயமாகத் தெரிகிறது.

> விலைமகளின் விலை ஒரு வேளைச் சோறுதான்; ஆனால், பிறன் மனையாளோ உயிரையே வேட்டையாடி விடுவாள்.
>
> ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால், அவனது ஆடை எரிந்து போகாமலிருக்குமா?
>
> ஒருவன் தழல்மீது நடந்து சென்றால், அவன் கால் வெந்து போகாமலிருக்குமா?
>
> பிறன்மனை நயப்பவன் செயலும் இத்தகையதே; அவளைத் தொடும் எவனும் தண்டனைக்குத் தப்பமாட்டான்.
>
> - நீதிமொழிகள் 6:26-29

**பொதுத் தகவல்கள்**

- அரபிக் கடலின் ராணி எனப்படுவது கொச்சின்.
- இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் உள்ள இடம் கொல்கத்தா.
- ஓர் அணிலின் சராசரி ஆயுட்காலம் ஒன்பது ஆண்டுகள்.
- பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கண்டுபிடித்தவர் மெகல்லன்.
- இரண்டாம் அசோகர் என்றழைக்கப்பட்டவர் கனிஷ்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனநலப் பாதிப்புகள்

■ J. பிரான்சிஸ் சேவியர்
நெல்சன் MAC, MSW, PhD,
இயக்குனர், போதை நோய் நலப்பணி, நாகர்கோவில்.

– சென்ற இதழ்த் தொடர்ச்சி .....

- **பாரம்பரியம்:** மூதாதையரிடமிருந்து வரும் பாதிப்பு சந்ததி வழித்தொடர வாய்ப்பு.
- **குழந்தைப்பருவ அனுபவம்:** குழந்தையாக இருக்கும்போது நடந்த கசப்பான வேதனையான நிகழ்வுகள்.
- **குடும்பச்சூழல்:** அடிப்படையான அன்பு தாய், தந்தை மற்றும் சகோதர சகோதரிகளிடமிருந்து கிடைக்காத நிலை.
- **உணர்வுச்சூழல்:** சமச்சீரின்றி ரவு நிலை குறைந்தோ அதிகரித்தோ காணப்படுதல்
- **சமூக சுற்றுச்சூழல்:** சிறுவயதிலிருந்தே வளரும் சூழலில் ஏற்பட்ட தாக்கம்.
- **கலாச்சாரச் சூழல்:** பிறப்பை, பழக்க வழக்கங்களை வைத்து மதிப்பிடல். சாதி, மத, இன, மொழி, பாலின, பண்பாட்டு பேதம் காட்டுதல்.
- **பொருளாதாரச் சூழல்:** அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றாமை.
- **அரசியல் சூழல்:** திடீர் சட்டங்கள், நடவடிக்கைகள் போர்கள் இவற்றின் அழுத்தம்.
- **உடல், அறிவு குறைபாடுகள்:** உடல் வளர்ச்சி மற்றும் ஆளுமை முதிர்ச்சியில் குறைபாடு.
- **தலைக்காயங்கள் :** மூளையின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள தேக்கம்.
- **திடீர் வாழ்வுச் சரிவுகள்:** வசதியாக, செல்வாக்காக வாழ்ந்தவர்களின் எதிர்பாராத வீழ்ச்சி.
- **அதிர்ச்சியான நிகழ்வுகள்:** கொடூரமான காட்சி, இயற்கையின் சீற்றம், பேரழிவு, சுனாமி இவற்றை நேரடியாக அனுபவித்தல்.
- **மேட்டிமையான எண்ணம்:** தன் நிலையை மீறி, தன்னைப் பெரியவராகக் காட்ட முயலுதல்.
- **தவறான நம்பிக்கைகள்:** சிந்தனையில் குழப்பம், முறையற்ற நம்பிக்கைக்கு இட்டுச் செல்லுதல்.

மேலே சொல்லப்பட்ட காரணங்கள் தனித்தோ, இணைந்தோ செயல்படும்போது பல்வேறு மனப் பிரச்சினைகள் எழுகின்றன. இம் மனப்பிரச்சினைகளைக் கையாளுவதில் ஏற்படும் சிக்கல்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஒருவருக்கு இருந்தால் பெரிய பிரச்சினைகளும் கூடப் பெரிதளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாது. அதே சமயம் ஏற்றுக்கொள்ள இயலாத மனநிலையோடு இருந்தால் சிறிய பிரச்சினைகளும் கூடப் பெரிதளவில் பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். இது ஒருவரின் ஆளுமையின் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சியைப் பொறுத்து மனநலப்பாதிப்பு அல்லது மனநலம் பாதிப்பின்மை என்றாகிவிடுகின்றது.

பிறப்பிலேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடும், பொருளாதாரத்திலே ஏற்றத் தாழ்வுகள் என்ற பாகுபாடும் இருக்கும் சமுதாயத்தில் மனநோய் ஒரு தனிமனித நோயாக அல்லாமல் சமூக நோயாகவே இருக்கிறது. தாழ்ந்த சாதி, வறுமை சூழ்நிலை போன்ற அவலநிலையில் இருப்பவர்களுக்கு உணர்ந்த சாதி, பணக்கார வாழ்க்கை போன்ற வசதி நிலையில் இருப்பவர்களை விட மனநோய் உருவாக வாய்ப்புகள் மிக அதிகம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்தோடு அன்றாட நடைமுறையில் பலர் இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர். இப்படி வாழ்பவர்களின் மனதில் குழப்பம் ஏற்படுவதோடு அந்நபரோடு தொடர்பில் இருப்பவர்களுக்கும் மனக்குழப்பம் ஏற்படுகிறது. இதனால் நாளடைவில் எது எதார்த்தம் என்பது தெளிவாகத் தெரியாமல் மனம் சிக்கலுக்குத் தள்ளப்படுகின்றது. இது மனநோய்க்கு இட்டுச்செல்கிறது.

### 7. மனநலப் பாதிப்புகளும் குடும்பமும்

புதிதாகப் பிறந்த ஒரு குழந்தைக்கு அனைத்துமே தாய்தான். பின்புதான் தந்தை, சகோதர சகோதரிகள், உறவினர்கள், பள்ளித்தோழர்கள் என்று பலரும் அக்குழந்தையின் வாழ்வில் தொடர்பு கொள்கின்றனர். எனவே தாயின் பங்கை பொறுத்துத்தான் ஒரு குழந்தையின் மனநலம் அமைவதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு தாய் அறிந்தோ அறியாமலோ செய்யும் தவறுகளும் தப்புகளும் குழந்தையின் மனநலத்தைப் பாதிப்பதாகவும் அதுவே பின்னாளில் மனநோயாக உருவாகக் காரணமாக இருப்பதாகவும் கூறுகின்றனர். தாய்ப்பாசம் கிடைக்காத குழந்தை, தாயிடமிருந்து பிரிக்கப்படும் குழந்தை, தாயைப் பார்த்து பயப்படும் குழந்தை, தாய் அளவுக்கு மீறிச் செல்லம் காட்டும் குழந்தை, தாயால் கடுமையாகத் தண்டிக்கப்படும் குழந்தை, தாயிடமிருந்து எதற்கும் தலையாட்டுதல் பெறும் குழந்தை ஆகிய யாவரும் பாதிப்புகளை மனதில் எதிர்கொள்ளாமல் கடந்து சென்று விடுவதில்லை. இதுபோல தாயை தொடர்ந்து தந்தை, சகோதர சகோதரிகள் என்று குடும்பத்தினர் செய்யும் தவறுகள், வைக்கும் கட்டுப்பாடுகள் சந்திக்கும் முரண்பாடுகள், நிர்ப்பந்திக்கும் எதிர்பார்ப்புகள், வருத்தும் சுமைகள், சுமக்கும் ஏக்கங்கள் எல்லாம் படிப்படியாக ஒன்றுசேர்ந்து ஏற்படுத்தும் எதிர்மறை குடும்ப சூழ்நிலை மனநோயின் பிறப்பிடமாகவும், உறைவிடமாகவும் ஆகிவிடுகிறது.

### 8. மனநலப் பாதிப்புகளும் சமூகப் பொருளாதாரமும்

தீர்வு காணமுடியாத அளவில் மனநோய் உருவாகுவதற்கான காரணமாக இருப்பது சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் என்று எளிதாகச் சொல்லிவிடலாம். வறுமையின் பிடியில் பொருளாதார நெருக்கடியில் இருப்பவர்களுக்கு மற்ற பாதிப்புகளோடு மனமும் சேர்ந்து பாதிக்கப்படுவது இயல்பானதாகும். அதோடு நல்ல தொழிலுமின்றி, வேலைக்கான வாய்ப்புமின்றி, தேவையான சம்பளமுமின்றி, குடும்பத்தை சரிவர நடத்த இயலாமல் ஆகிவிடுகிறது. கடன் வாங்கித்தான் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறைவிடம் இவற்றைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பாரத்தால் பயம், பதற்றம், அழுத்தம், சோர்வுக்கு ஆளாகின்றனர். அதோடு தங்களின் சுய மதிப்பும் சமூக மதிப்பும் குறைவதால் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுவதோடு வாழ்க்கையில் வெறுப்பும், விரக்தியும் ஏற்பட்டு மனநோய்க்கு ஆளாகிவிடுகின்றனர்.

இவற்றோடு சமூகத்தில் ஏற்படும் கொரோனா போன்ற பெருந்தொற்று நோய் மற்றும் போர், பஞ்சம், வெள்ளப்பெருக்கு, சுனாமி, நிலநடுக்கம் ஆகியவையும் மனப்பாதிப்பை விளைவிக்கும் தன்மை கொண்டவை. திடீர் மரணம், பெரும் விபத்து, ஈடுசெய்ய முடியாத இழப்பு, எதிர்பாராத நஸ்டம், காதல் தோல்வி, விவாகரத்து, பெயருக்கு களங்கம் போன்ற நிகழ்வுகளும் மனதிற்குப் பாதகம் விளைவிக்கும் பிரச்சினைகளாக அமைந்துவிடுகின்றன.

### 9. மனநலப் பாதிப்புகளின் அறிகுறிகள்

மனநலப் பாதிப்புகளின் அறிகுறிகளாக தீவிரமான மனநலப்பாதிப்புக்களின் வெளிப்பாடான மனநோய் பற்றித்தான் பாக்கிறோம். மனநோயின் அறிகுறிகள் என்று பார்க்கும்போது ஒரு நீண்ட பட்டியல் நம் கண்கள் முன்பாக வந்து நிற்கிறது. உண்மைக்கு புறம்பான சிந்தனை, குழப்பமான உணர்ச்சி வெளிப்பாடு, தவறானதை தீர்க்கமாக நம்புதல், தனக்குத் தானே பேசுதல், காரணமில்லாமல் சிரித்தல், திடீரென அழுதல், இடைவெளியில்லாமல் சொல்லுதல், ஒரு விஷயத்திலிருந்து மற்றொன்றுக்குத் தாவுதல், தொடர்ந்து வருத்தத்திலிருத்தல், காரணமின்றிக் கோபப்படுதல், மிகையுணர்ச்சியை வெளிப்படுத்தல், உணச்சியற்று காணப்படுதல், அளவுக்கதிகமாக வருத்தப்படுதல், மாயக்காட்சிகளை காணுதல், மாயக்குரலை கேட்டல், தற்கொலை எண்ணம் கொண்டிருத்தல், சாதாரண செயல்களிலும் ஈடுபட முடியாமலிருத்தல், புதிரான முறையில் நடந்துகொள்ளுதல், வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையான சிக்கலை மறுத்தல், கற்பனை உலகில் சஞ்சரித்தல், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் பேசுதல், பேசியதை திரும்பத் திரும்பப் பேசுதல், வேகமாக இரைச்சலோடு பேசுதல், கேள்விக்குப் பதில் சொல்லாமலிருத்தல், பிறர் தன்னைத் துன்புறுத்துவதாக நினைத்தல், தனக்கெதிராக சதி செய்வதாகக் கூறுதல், அழ வேண்டிய இடத்தில் சிரித்தல், சிரிக்க வேண்டிய இடத்தில் அழுதல், பொருத்தமின்றிப் பேசுதல், தன்னை வேறொருவராக கருதுதல், ஆள்-இடம்-காலம் தெளிவின்றி காணப்படுதல், தூங்காமல் விழித்திருத்தல், மீண்டும் மீண்டும் கையைச் சுத்தம் செய்தல், தன்னைப்பற்றி பெருமையோடு பேசுதல், மிதமிஞ்சிய பக்தி பரவசத்தில் இருத்தல், அளவு கடந்த பாலியல் நாட்டம் கொண்டிருத்தல், அடிப்படை சுத்தம் சுகாதாரம் கடைபிடிக்க முடியாமலிருத்தல் என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

– தொடரும்.....

# பார்வைகள் பலவிதம் – 30

*– ஹென்றி*



எதிர்பாராத நேரங்களில் திடீரென நிகழும் நிகழ்வுகள் பலரது வாழ்க்கையில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இன்றைய கால கட்டத்தில் சுற்றுச் சூழலில், உலக உணவு அமைப்பு முறைகளில், பொருளாதார சந்தைகளில், தனி மனிதரில்... இவ்வாறு பல்வேறு துறைகளில் மாற்றம் தேவைப்படுகிறது. ஒரு சமுதாயத்தின் மாற்றம் தனி மனித மாற்றத்தில்தான் தொடங்குகிறது. நாம் ஒரு கடையில் சூடாக ஒரு கப் தேநீர் வாங்கிக் குடிக்கத் தொடங்கும் நேரத்தில், அங்கு வந்த நபர் ஒருவர் தெரியாமல் நம்மீது மோதுகிறார். அதனால் தேநீர் வெளியே சிந்துகிறது. நமது உடையும் வீணாகிறது என்று வைத்துக் கொள்வோம். இங்கு தேநீர் சிந்தியதற்கு அந்த நபர் மோதியதுதான் காரணம் என்று சொன்னால், அது ஒரு வகையில் தவறுதான். ஆனால் நம் கையில் தேநீர் கப் இருந்ததால்தான் அது சிந்தியது. அதேபோல் அந்நேரத்தில் நம் கையில் வேறு ஏதாவது இருந்திருந்தாலும், அதுவும் சிந்தத்தான் செய்திருக்கும். இந்த நிகழ்வை நம் வாழ்க்கையோடு பொருத்திப் பார்ப்போமே. வெளியேயிருந்து ஏதாவது நம்மை மோதும்போது நமக்கு உள்ளே என்ன இருக்கிறதோ அதுதான் சிதறும்.

எனவே வாழ்க்கையில் கடினமான நிகழ்வுகள் நம்மை அசைத்துப் பார்க்கும்போது, நமக்குள்ளே இருந்து வெளியே சிந்த வேண்டியவை என்னவென்று சிந்திப்போம். அவை நிச்சயமாக காழ்ப்புணர்வாக, கசப்புணர்வாக, பயமாக, சுடு சொற்களாகவோ இருக்கக் கூடாது. மாறாக, மன்னிப்பு, கருணை, அன்பு, நன்றி, மகிழ்ச்சி போன்றவையாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால், எந்தவொரு கடின சூழல் நம்மை அசைத்துப் பார்க்கும்போது, நம்மிலிருந்து வெளியே சிதறுவது அனைத்தும் நல்லவைகளாகவே இருக்கும்.

எனவே, மாறுவோம். மற்றவர் மாற்றம் காண உதவுவோம். நாம் மனது வைத்தால் மாற முடியும். யாரையும் மன்னிக்கவும் முடியும், மாற்றவும் முடியும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஒழுக்க நடத்தை விருத்திக்கு

## விழுமிய அடிப்படையிலான கல்வியின் அவசியம்

A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I



"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

"கல்வியும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை"

"...... பத்துத் திங்கள் சுமந்தாளே அவள் பெருமைப்பட வேண்டும், உன்னைப் பெற்றதனால். அவள் மற்றவராயோ போற்றப்படல் வேண்டும். கற்றவர் சபையில் உனக்காகத் தனி இடமம் தர வேண்டும். உன் கண்ணில் ஒரு துளி நீர் வந்தாலும் உலகம் அழவேண்டும்......"

முதலில் உள்ளது திருவள்ளுவர் வாக்கு. அது ஒழுக்கம் உயிரை விடவும் மேலானது என்கின்றது. அடுத்த கருத்தும் ஒழுக்கத்துடன் சேராத கல்வி பெறுமதியற்றது என்கின்றது. பின்னையது சினிமாப் பாடலின் சில வரிகள். நீ உனது உன்னதமான வாழ்க்கையால் கருவறையில் உன்னைச் சுமந்த தாய் கல்லறை செல்லும் வரையாவது உன்னால் கிடைக்கும் பெருமை பற்றிய அற்புதமான வார்த்தைகளாகும்.

கல்வியே ஒழுக்கமாகும்.
ஒழுக்கமே கல்வியாகும்.
அதுவே வாழ்க்கையுமாகும்.....

மயிர் நீற்பின் வாழாக் கவரி மான் உயிர் நீற்பது போன்ற நிலையில் மனிதன் இல்லாவிட்டாலும், தீங்கு செய்யு முன் மாற்றமடைதல், இல்லையேல் வருந்தி, திருந்தி மீண்டுவர பிள்ளைகள் வழிநடத்தப்படல் வேண்டும்.

....... தவறு என்பது தவறிச் செய்வது..

தப்பு என்பது தெரிந்து செய்வது.

தவறுசெய்தவன் திருந்தப் பார்க்கணும்

தப்பு செய்தவன் வருந்தியாகணும்.

என்பதற்கிணங்க துக்கமடைதல், வருத்தப்படல், கவலைப்படல், வேதனைப்படல், சினமடைதல் போன்ற எதிர்மறை உணர்வுகளாலும், தன்னார்வமடைதல், மகிழ்ச்சியடைதல் (Positive consues), ஊக்கமடைதல், முன்மாதிரி பெறல், வழிப்படுத்தப்படல், திருத்தப்படல் போன்ற நேர்மறை உத்திகளாலும் பிள்ளைகள் ஒழுக்க நடத்தைகளைக் கற்றுக்கொள்ள இடமளிக்கப்படல் வேண்டும்.

நல்லொழுக்க செயற்பாடுகளுக்கான ஆசான் "மனச்சாட்சி" ஆகும். உயிர்ப்பின்றி, உணர்ச்சியின்றி எமக்குள்ளே உறங்கிக் கிடக்கும் மனச்சாட்சி எனும் அவ் ஆசான் எமது செயல்களுக்கெல்லாம் நீதிபதியாக செயற்பட இடமளித்தல் சாலச் சிறந்தது. "மனச்சாட்சி" எனும் நீதிபதிக்குப் பயப்படும் நிலை எம் ஒவ்வொருவருக்கும் உருவாக வேண்டும். அப்பொழுது குற்றச் செயல்களிலிருந்து விடுபட்டு அனைவரும் ஒழுக்கச் சீலர்களாக வாழ அதிக வாய்ப்பு உண்டாகும் என்பது உறுதியாகும். உதாரணமாக நாம் ஒரு சிறு தவறுக்காக உடலாலோ, உள்ளத்தாலோ ஒருவரைத் தாக்க முற்படும்போது அவனும் உன்னைத் திருப்பித் தாக்கினால்? என்று எம்மைத் தடுத்து நிறுத்துவது - எமது மனசாட்சியே ஆகும். நடுநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாது நாம் செயற்பட எம்மை வழிநடத்தும் அளவுகோலுமாகும்.

எமது கல்வி முறையில் பெரும்பகுதி அறிவு பெறும் அடிப்படையானதும், தகவல் மையமானதாகவும், ஞாபகப்படுத்தி ஒப்புவிப்ப தன் மூலம், எழுத்துப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்று அறிவுப் புலத்தை (Cognitive Domain) விருத்தி செய்வதற்கப்பால் பிள்ளை களின் மனப்பாங்கு, நற்பழக்கவழக்கங்கள், பரஸ்பர புரிந்துணர்வு, பிறரை மதித்தலும் கரிசனை கொள்ளலும், தேசப்பற்று ஆகியவற்றை ஊட்டி, வலுப்படுத்தி, பயிற்சியளித்து நற் பிரசைகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்துவதில்லை என்ற விடயம் பரவலான ஒரு குற்றச்சாட்டாகும். இதனால் பிள்ளைகளிடம் ஏற்பட வேண்டிய சமனிலையான ஆளுமை (Balanced Persionality) உருவாக்குவது எமது கல்விக் கொள்கையில் தொடர்ந்தும் சவாலாகவே உள்ளது.

**வகுப்பறையில் பாடங்களுடன் விழுமியங்களை ஒன்றிணைத்துக் கற்பித்தல்:**

பாடசாலைக் கலைத்திட்டத்தில், ஒவ்வொரு தரத்திற்கும் உரிய பாடங்களின் எண்ணிக்கை, ஏற்கெனவே அதிகமாக உள்ளது. இந்த நிலை மையில் விழுமியக் கல்வி எனும் மற்றொரு பாடத்தையும் சேர்ப்பதனால் மாணவர்கள் வெறுப்புகொள்ள நேரிடும். எனவே, விழுமியங் களை ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைத்துக் கற்பிக்க வேண்டுமென்ற கருத்து 20ம் நூற் றாண்டின் பின் தசாப்தங்களில் வலுப்பெறத் தொடங்கியது. இதன்படி தமிழ்மொழியும், இலக்கியமும், சுற்றாடல் சார் செயற்பாடுகள், அழகியல்கல்வி, குடியுரிமைக்கல்வி போன்ற பாடங்களில் மட்டுமன்றி விஞ்ஞானம், கணி தம், தொழிநுட்பக்கல்வி, உடற்கல்வி போன்ற பாடங்களிலும் செறிந்து காணப்படும். விழுமியங் களை - அவற்றில் புதைந்துள்ள வாழ்க்கைப் பெறுமானங்களை (Values) வெளிப்படுத்த உதவும் கற்றல் சந்தர்ப்பங்களை ஆசிரியர் உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

விழுமியங்களை பாடங்களில் ஒன்றிணைக் கும்போது, பின்வரும் விழுமியத் திறன்களின் விருத்திக்கு முக்கியத்துவம் அளிப்பது வருந்தத் தக்கது.

**உடல்சார் விழுமியம்** - உடற்சுகாதாரம் அமைதி பேணல்

**அறிவுசார் விழுமியம்** - உண்மை, சகிப்புத்தன்மை

**அறம்சார் விழுமியம்** - அன்பு, மரியாதை செலுத்துதல்

**ஆன்மிகம் விழுமியம்** - உலகளாவிய ஆன்மிகம்

**சமூகம் சார் விழுமியம்** - நீதி, ஒத்துணர்வு (Empathy)

**பொருளியார் விழுமியம்** - நிலைத்திருக்கும் மனித அபிவிருத்தி

**அரசியல் சார் விழுமியம்** - தேசியத்துவம், அகிலமயம்


மேலும் விழுமிய அடிப்படையிலான கல்வி, வகுப்பறையில் இடம்பெறும் பாடக்கல்வி யுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தலா காது. இணைப்பாட விதான (Co-curricula), பாடப்புறக் கிருத்திய (Extra-Curricula) மற்றும் மறைகலைத்திட்டத்தின் (Hidden curricula) ஆகியவை மாணவர்களிடம் சீரான நடத்தை கள் விருத்தியடைய களம் அமைத்துக் கொடுக் கின்றன என்பதை மறத்தலாகாது.

அத்துடன் ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பாடசாலையின் முழு சமூகமும் தமது நடை, உடை பாவனைகளில் ஒழுக்க விழுமியங்க ளைப் பற்றிக்கொண்டு முன்மாதிரிக் காட்டுதல் விழுமிய அடிப்படையிலான கல்வியை சிறந்த முறையில் முன்னெடுக்க உதவும் பயனுள்ள அணுகுமுறையாகும்.

பாடங்களில் விழுமிய ஒன்றிணைப்பு, மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மை தரக் கூடியவாறு அறிவைப் பயன்படுத்துவதற்குக் கற்பித்தலாகும்.

"உலகம் எதை வழங்குகின்றது எனக் கருதா மல் உலகம் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதற்கு நாம் எதை வழங்குகிறோம் என்பதே முக்கியமானதாகும்"

"தர்மம் ஓங்க வேண்டும். சத்தியம் நிலைபெற வேண்டும் என்று உள்ளூற முயன்றாலே போதும். அதுவே ஆண்டவனை வழிபட்டதற்குச் சமமாகும்"



"ஒரு நாட்டின் கட்டுப்பாடு, பெருமை இவையெல்லாம் அது எவ்வளவு கோடீஸ்வரர்களைக் கொண்டிருக்கிறது என்பதில் இல்லை. அந்த நாட்டு மக்கள் பசியின்றி வாழ்கிறார்களா என்பதில்தான் இருக்கிறது"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உலகச் செய்திகள்!

- இணையம்

## வறட்சியின் கோர முகம்

தென் ஆப்பிரிக்க தேசங்களில் வரலாறு காணாத வறட்சி நிலவி வருகிறது. அந்த நாடுகளின் தரவுப்படி கடந்த 40 ஆண்டுகளில் இது மாதிரியான வறட்சியை எதிர்கொண்டது இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உணவுப் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சுமார் 700 வன உயிரினங்களை கொல்ல உள்ளதாக நமீபியா அறிவித்தது. இதில் 83 யானைகளும் அடங்கும். இந்நிலையில், நமீபியாவை தொடர்ந்து ஜிம்பாப்வேயிலும் யானைகளை கொன்று மக்களுக்கு உணவாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஜிம்பாப்வேயில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடும் வறட்சி வாட்டி வதைத்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 50 யானைகள் கொல்லப்பட்ட நிலையில், தற்போது 200 காட்டு யானைகளைக் கொன்று இறைச்சியை மக்களுக்கு வினியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ✷



## உலகின் மிக வயதான பூனை

இங்கிலாந்தின் நார்விச் நகரை சேர்ந்த நபர் ஒருவர் ரோஸி என்ற பூனையை வளர்த்து வந்தார். இந்த பூனை 1991-ல் பிறந்துள்ளது. இந்தாண்டு ஜுன் 1 ஆம் தேதி இந்த பூனை தனது 33 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது. அத்துடன், உலகின் மிக வயதான பூனை என்ற பெருமையோடு வலம் வந்தது. இந்த நிலையில், உடல்நலக் குறைவால் அவரது உரிமையாளரின் வீட்டில், செப்டெம்பர் மாதம் 16ம் திகதி உயிரிழந்தது. 33 ஆண்டுகள் வாழ்ந்த பூனை ரோஸியின் வாழ்நாளை மனித வாழ்நாளோடு ஒப்பிட்டால் இது 152 ஆண்டுகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. ✷



## புயல் பாதிப்பு

தென்சீனக் கடலில் உருவான யாகி புயல் பிலிப்பைன்ஸ், தெற்கு சீனா, வியட்நாம், லாவோஸ் மற்றும் மியான்மர் நாடுகளை கடுமையாகத் தாக்கியது. இந்தப் புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட கனமழை மற்றும் அதன் தொடர்ச்சியாக, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஆகியவை ஏற்பட்டன. இதனால் மக்களின் வாழ்க்கையை சூறாவளி புரட்டிப்போட்டுச் சென்றது. இந்நிலையில், மியான்மரில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச் சரிவுகளில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 226 ஆக உயர்ந்துள்ளது. 77 பேர் காணாமல் போயுள்ளதாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மியான்மர் உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடனான தகவல் தொடர்பு சிக்கல்கள் காரணமாக, உயிரிழப்பு எண்ணிக்கை மெதுவாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். யாகி புயல் முன்னதாக வியட்நாம், வடக்கு தாய்லாந்து மற்றும் லாவோசைத் தாக்கியது. இதில் வியட்நாமில் கிட்டத்தட்ட 300 பேரும், தாய்லாந்தில் 42 பேரும், லாவோசில் 4 பேரும் உயிரிழந்ததாக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது. ✷



## அணுகுண்டு வீச இடம் குறித்த ரஷ்யா ...

மாஸ்கோ: உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வருகிறது. இந்நிலையில் தான் அணுகுண்டு வீச ரஷ்யா முழுவீச்சில் தயாராகி வருவதாகவும், அணுகுண்டு வீசுவதற்கான இடத்தை ரஷ்யா தேர்வு செய்துள்ளதாகவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா இரண்டரை ஆண்டுகளாகப் போர் தொடுத்து வருகிறது. இந்த போர் நடவடிக்கையால் ரஷ்யா மீது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. அதோடு ரஷ்யாவை எதிர்க்க தேவையான அனைத்து வகையான உதவிகளும் அமெரிக்கா சார்பில் உக்ரைனுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை கோபப்படுத்தி உள்ளது. மேலும் இந்த விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் தலையிடக்கூடாது. ஏனென்றால் எங்களிடம் அணு ஆயுதம் இருப்பதை மறந்து விடக் கூடாது என ரஷ்யா தொடர்ந்து கூறி வருகிறது. ரஷ்யா - உக்ரைன் போருக்கு நடுவே ஆர்க்டிக் (Arctic) பகுதியில் அணுகுண்டை வீச ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக "தி டெய்லி' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக ரஷ்யாவின் அணுகுண்டு சோதனை தளத்தின் இயக்குநர் ரியல் அட்மிரல் ஆண்ட்ரே சினிட்டின் முக்கிய தகவலை தெரிவித்துள்ளார். அவர் ரஷ்யாவின் Rossiyskaya Gazeta செய்தி நிறுவனத்திடம் கூறிய தகவல் குறிப்பிடப் பட்டுள்ளது. அதில் "ஆர்க்டிக்கில் நம் நாட்டின் பாதுகாப்பு கருதி பல்வேறு ஆயுத சோதனை நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். இதற்கான ஆய்வகம் தயாராக உள்ளது. சோதனைக்கான அனைத்து வசதிகளும் ரெடியாக இருக்கிறார். பணியாளர்கள், ஆராய்ச்சியாளர் களும் தயாராகி உள்ளனர்.



✷



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிற்பி

சிறுகதை



■ பைந்தமிழ்க்குமரன் ஜெ.டேவிட்

அழுக்கேறிய மிகவும் பழைய சப்பாத்து. அடிப்பாகம் குதியால் கழன்று ஊசி நூலால் கட்டி முடிச்சுப் போடப் பட்டிருந்தது. அளவுக்கதிகமாக நீலம் போடப் பட்டு அலசப்பட்ட வெள்ளை றவுசர் அயன் பண்ணப்படாததால் கசங்கிய நிலையில் இருந்தது. மேற்சட்டைகூட கசங்கி வெளிறிப் போனதாகவே தெரிகிறது.

"எக்ஸ்கியுஸ்மி சேர்...."

முதலாம் பாடம் தொடங்கி இருபது நிமிடம் கடந்த நிலையில் அந்தக்குரல் அவர் காதில் விழுகிறது. திரும்பினார். மாணவர் சிலர் அவனைக் கண்டதும் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தனர். பலர் ஏளனப் பார்வையை வீசினர். ஒரு மாணவி தன் தலையில் தட்டியபடியே ஆசிரியரைச் சுட்டிக் காட்டுகிறாள். வகுப்பறையின் வாயிற்புறத்தை எல்லோரது பார்வையும் மொய்த்தது. அவன் தலை குனிந்து நிற்கிறான்.

"ஸ்கூல் வாற நேரம் தெரியாதோ? அசெம்பிளியும் முடிஞ்சி பாதிப் பாடமும் முடிஞ்சி போச்சிது. ஆடி அசைஞ்சி வாறார் ஐயா.... ஏன்ரா எங்கட உசிர எடுக்கிறியள்...."

"சேர் அவன் வழமையா இத விடவும் பிந்தித்தான் வாறவன். இண்டைக்கி ஏளியா வந்திற்றான்..."

இது ஒரு மாணவனின் குரல்.

அவன் எதுவும் பேசவில்லை.

"என்ன பேரு....?"

தலை குனிந்தபடியே,

".....ஜெயரூபன்"

"ஓ.... பேருல ஒரு குறைச்சலுமில்ல...... ஜெயம் எண்டா வெற்றி. ஜெயரூபன் எண்டா வெற்றி வடிவானவன் எண்டு பொருள். ம்ம்ம்..... சாயம் போன உடுப்பும் தேய்ஞ்சி போன சப்பாத்தும் ...... நீயெல்லாம் படிச்சி என்னத்தக் கிளிக்கப்போற.... போ..... போய் பின் வரிசையில குந்து...."

வகுப்பில் சலசலப்பகள், சிரிப்புகள் .... அவன் கூனிக்குறுகி நடந்து கடைசி வரிசையில் கடைசி மூலையில் முதுகுப் பலகைகூட கழன்று கம்பி மட்டும் துருத்திக் கொண்டிருந்த கதிரையில் அமர்ந்து கொள்கிறான். பாடம் தொடர்கிறது.

அன்று இடைவேளை நேரத்தில் தொலைந்து போனான்.

நான்கு மாதங்கள் கடந்தும் அவனது வரவின்மை பற்றி பாடசாலை அலட்டிக் கொள்ளவேயில்லை. ஆனால் தான் பேசிய வார்த்தைகள் அவற்றின் தாக்கம் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மனதில் நெருஞ்சி முள்ளொன்று உறுத்திக்கொண்டேயிருந்தது. மனம் பரபரத்தது. ஓ.எல் பரீட்சையில் ஐந்து ஏ சித்திகளைப் பெற்றிருந்தான். விசாரித்துப் பார்த்தார். மிகவும் பின் தங்கிய கொலனிப் புறத்து கிராமம் ஒன்றிலிருந்து வருபவன் என்பதைத் தவிர வேறு எந்த தகவலும் கிடைக்கவில்லை.

நகரின் தெற்குப் பிரதேசத்தில் புதிதாக தொடங்கப்பட்டிருந்த உப பொலிஸ் நிலையத்தில், 'சிவில் பாதுகாப்பு குழுவினருக்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் மூன்று முப்பதுக்கு' என்று அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அவர் அக்குழுவின் தலைவர் என்பதால் தொலை பேசி மூலமாகவும் அழைப்பு கிடைத்திருந்தது.

புறப்பட்டுச் சென்றுவிட்டார். பிரதம அதிகாரி ஜயசிங்க புதிதாக வந்தவர். "குடீவினிங்" சொல்லி வரவேற்றார். ஏனைய வர்கள் வந்து சேரும்வரை சிங்களத்திலே பலதும் பத்தும் பேசத்தொடங்கி விட்டார். தமிழ் பெரிதாகத் தெரியாது போலும். பிரதேச நிலவரங்கள் விபத்துகள், குற்றங்கள் என்று தொடர்ந்த பேச்சிடையே....,

"அற பலண்ட மாஸ்ரர்... ஏஎல் இகன கண்ண கொல்லா அத உதய அபி அரஸ்ட் கறா...."

அவர் திரும்பினார். அதிர்ச்சியில் உறைந்து போனார். கம்பிக்கூண்டினுள் சுருண்டு கிடந்தான். பரட்டைத்தலை; சவரம் செய்யப்படாத முகம்; குழி விழுந்த கண்கள்; உள்ளாடை மட்டும் ஆடையாக..... மனம் பதைத்துப் போனவராக,

"த.... தம்பி..... ஜெயரூபன்....."

ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையாகி அதை விற்கவும் தொடங்கிய நிலையில் தங்களிடம் அகப்பட்டான் என்று ஜயசிங்க கூறினார். ஜயசிங்க நல்ல மனிதர். இரக்க குணம் கொண்டவர்.

தன்னுடைய பேச்சினால் பாதிக்கப்பட்ட அவன் இப்படி ஆகியிருக்கலாம் என்றுகூறி இரந்து நின்றவரின் கைகளைப் பெருமையோடு பற்றிக்கொள்கிறார் ஜயசிங்க.



"அப்பா குடிச்சிக் குடிச்சி குடல் வெந்து செத்துப் போயித் தாரு. அம்மா என்னய விட்டிட்டு வேற கலியாணம் முடிச்சி போயித்தா. நா... நான் .... ஆச்சி யோடதான் கிடந்தன்..... சாப்பாட்டுக்கே வழியில்ல..... எப்பிடி சேர்.... நல்ல உடுப்பு சப்பாத்து எல்லாம் ...... வசை சொல்லத் தெரிஞ்சவங்களுக்கெல்லாம்..... வழி சொல்லத்தெரியல்லயே சேர்......"

தொண்டை அடைத்து கண்கள் கண்ணீரை சொரிய அழுதான்.

ஜயசிங்க அவனுடைய கையைப்பிடித்து அவருடைய கையில் ஒப்படைக்கிறார். அது மிக இறுக்கமான பிடி. அந்த நிமிடம் இப்போது கண்களில் தெரிகிறது.......

கைதட்டல்களிடையே பட்டம் பெறுவதற்கான அடுத்த பெயராக ஜெயரூபனின் பெயரைக் குழந்தை நல மருத்துவர் என்ற அடை மொழியுடன் ஒலிபெருக்கி அழைக்கிறது. மடிப்புக் கலையாத புத்தம் புதிய உடை; நீண்ட கறுப்புநிற மேலங்கி; தலையில் சதுர வடிவினதான தொப்பி; மேடைக்கு வருகிறான். பீடாதிபதியின் கையில் பட்டச் சான்றிதழ். அருகில் சிரேஸ்ட்ட விரிவுரையாளர்கள். ஒருவர் கையில் இலச்சினை மாலை. ஒரு நிமிடம் நின்றவனின் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடி அலைபாய்கின்றன.

- 23ம் பக். பார்க்க ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்முறை ஜனாதிபதி தேர்தல் திருவிழா கச்சிதமாக நடைபெற்று முடிந்து விட்டது. தேர்தல் ஆணைக்குழு படுநேர்த்தியாக அனைத்து செயற்பாடுகளையும் செய்து முடித்திருந்தது. இம்முறை பிரச்சாரங்களில் இன, மத வெறுப்புச் செயற்பாடுகள் காணப்படவில்லை. மிக அமைதி யாக தேர்தல் நடைபெற்று முடிந்து விட்டது.

ஜனாதிபதி அநுர அவர்களின் வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் நிதானமாக, அளந்தெடுத்துத்தான் வெளிவருகின்றன. இம்முறை ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் தேசிய கீதம் பாடப்பட்டபோது பௌத்த குருமார் எழுந்து நின்றதை சிங்கள ஊடகம் ஒன்று சுட்டிக் காட்டியிருந்தது. இது முன்னொருபோதும் நிகழாத நிகழ்வு.

போட்டியிட்ட வேட்பாளர்கள் அநுர, சஜித், ரணில் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் (நாமல், அரியநேந்திரன் உட்பட).

இதற்கிடையில் 1982ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலம் மொத்த வாக்குகளில் 2.67 வீதம் வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் அரியநேந்திரனோ வெறும் 1.69 வீதம் வாக்குகளையே பெற்றிருந்தார். இது ஒரு பின்னடைவான நிலையே.

1982ம் ஆண்டு தேர்தலில் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டிருக்க அவரின் மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ தேர்தலை பகிஷ்கரிக்கச் சொல்லியிருந்தார். அரியநேந்திரன் சொந்தமாவட்டத்திலே அவர் பெருமெடுப்பில் வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்ட வேண்டியதொன்று.

இம்முறை தேர்தலில் 35 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை. இதில் கணிசமானோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளார்கள். ஏழையோருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை நாட்டம் என்பன இல்லை போலும். சிங்கப்பூரில் வாக்களிக்காவிட்டால் சட்டப்படி குற்றம். அதுபோல் இங்கும் சட்டம் கொண்டு வரவேண்டும் போல்தான் தெரிகிறது.

300300 பேரின் வாக்குகள் நிராகரிக் கப்பட்டுள்ளன. இலங்கை மக்கள் கல்வியறிவுள்ள வர்கள். வேண்டுமென்றே நிராகரிக்கும்படி வாக்களித்தார்களா? கணிசமான பாமர மக்கள் வாக்களிக்கும் முறையில் தடுமாறியிருக்கலாம். சற்றுச் சிக்கலான வாக்களிப்பு முறைதான். இன்னும் வாக்குச்சீட்டில் கை, யானை, வீடு போன்ற சின்னங்களைத் தேடும் வாக்காளர்களும் இல்லாமல் இல்லை. போதாக்குறைக்கு 38 வேட்பாளர்கள். சில வாக்காளர்கள் திணறியிருப்பார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

23.09.2024 அன்று வெளியான "காலைமுரசு" பத்திரிகை தன் பத்திச்செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"சுனாமி ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கை களுக்காக புலிகளுடன் சேர்ந்து சந்திரிக்கா ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினார். அதை ஆட்சேபித்து சந்திரிக்கா அரசிலிருந்து அப்போதைய ஜேவிபி இதே அநுரகுமார திசாநாயக்காவையும் எம்பியாக கொண்டிருந்த அக்கட்சி – வெளியேறித் தனது பேரினவாத வெறித்தனத்தை வெளிப்படையாக பிரகடனப்படுத்தி நின்றது என்ற நினைவு எனக்குண்டு.

தமிழர் விரோதக் கட்சி என்றும், இனவாதக் கட்சியென்றும் தலைவர் பிரபாகரனால் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு தரப்பின் எம்பியைத்தான் இன்று நாட்டின் ஜனாதிபதியாக்குவதற்கு தமிழர்களும் கணிசமாகச் சேர்ந்து வாக்களித்திருக்கின்றார்கள்.

அந்த நிலை போக்கில் இருந்து ஜேவிபி தன்னை மாற்றிக் கொண்டுவிட்டதா என்பதை புதிய ஜனாதிபதி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமது நடவடிக்கை மூலம், செயற்பாடுகள் வாயிலாக வெளிப்படுத்திக்காட்டுவது பொருத்தமானது. அவர் செய்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்...! (நன்றி காலைமுரசு)

இலங்கை மக்கள் யார் என்ன சொன்னாலும் மாற்றமொன்றை சுயமாக விரும்பி ஏற்படுத்தியுள்ளார்கள்.

மாற்றம் வந்துவிட்டது. ஆனால் பழையவர்களிடம் இருந்து ஊறிப்போன அரச அதிகாரிகள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற உணர்வு ஜனாதிபதியிடம் ஏற்பட்டுள்ளது போலும். இது தொடர்பாகவும் அவர் கவனமாக காய் நகர்த்தத் தொடங்கிவிட்டார் என்றே தெரிகின்றது.

இதை நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும். புதிய வேட்பாளர்கள் வரக்கூடும்.

எமது தமிழ்கட்சிகள் சற்றுக்கவனமாக இருக்க வேண்டும். மிகவும் நிதானமாக செயற்பட்டு வேட்பாளர்களைத் தெரிவுசெய்யுங்கள். படித்த இளைஞர்கள், இளம் பெண்களுக்கு இடம் கொடுங்கள்.

மழைக்கு முளைக்கும் காளான்கள் போல் (ஒழிந்துவிட்டு தலைவர்கள் போல் வேடமிடும்) வெளிவரும் ஆசாமிகளை நம்பி களமிறக்காதீர்கள்.

கூடுதலாக கட்சிகள் ஒற்றுமையாக செயற்படுங்கள். அதற்காக சோரம்போனவர்களை மீண்டும் சேர்த்துப் பிடிக்காதீர்கள். மக்கள் எச்சரிக்கையாய் உள்ளார்கள். தூக்கியெறிந்து விடுவார்கள்.

புலம்பெயர் சகோதரர்களும், அங்குள்ள அரசியல் வியாபாரிகளும் எங்கள் மக்களை சுயமாக சிந்திக்க விடுங்கள்.

**- சிற்பி** சிறுகதைத் தொடர்ச்சி .....

அவர் மெல்ல எழுந்து கையை அசைக்கிறார். அவன் மேடையை விட்டு இறங்கி ஓடோடி வந்து அவரைக்கட்டி அணைத்துக் கொள்கின்றான். கம்பிக்கூண்டை திறந்து அவனை அணைத்தபோது அவன் கண்கள் சொரிந்த கண்ணீர் இப்போது மறுபடியும் ஆனந்தக் கண்ணீராக....

அவர் பூரித்துப் போகின்றார். "தம்பி நீ அழக்கூடாது... ஜெயம் என்டா வெற்றி.. வா... வா... அவனை மேடையேற்றி விடுகின்றார். அவரது கைகளில் அவனது கண்ணீர்த் துளிகள் விழுகின்றன. டொக்டர் ஜெயரூபனாக மேடையை விட்டு இறங்கும் அவனுக்காக அகல விரித்த கரங்களுடன் நிற்கிறார் அந்தச் சிற்பி.




சவுதி அரேபிய அரசுக்கு எதிராக கருத்து தெரிவித்ததற்காக ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு 30 ஆண்டு சிறை தண்டனை விதித்து சவுதி கோர்ட் உத்தரவிட்டுள்ளது. முகமது அல்முகமது அல் காம்தி என்பவர் சவுதி அரேபியாவில் ஓய்வுபெற்ற ஆசிரியர். இவர் எக்ஸ் தளப்பக்கத்தில் வெறும் 9 பாலோவர்களைக் கொண்டுள்ளார். அதில் அரசுக்கு எதிராக கருத்து பதிவிட்டு வந்தார். இதனால் கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். அதன்பிறகு ஜூலை 2023-ம் ஆண்டு அவருக்கு சிறப்பு குற்றவியல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். அதனை விசாரித்த கோர்ட், கடந்த ஒகஸ்ட் மாதம், மரண தண்டனையை ரத்து செய்தது.

இதனைத் தொடர்ந்து, ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு 30 ஆண்டு சிறை தண்டனை விதித்து சவுதி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

– மாலை மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினாவிடைப் போட்டி இலக்கம் - 56

**முதலில் வரும் ஐந்து வினாக்களும் 1 மக்கபேயர் 1-10 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.**

1) மக்கபேயர் நூல் வலியுறுத்தும் செய்தி என்ன? ..........

2) அந்தியோக்கு மன்னன் எகிப்தியை வெற்றிகொண்டு திரும்புகையில் எருசலேம் திரு உறைவிடத்தில் புகுந்து சூறையாடிய பொருட்கள் எவை? ..........

3) எபிரேயத்தில் "கசிதேயர்" என்பதன் பொருள் என்ன? ..........

4) போரில் இறந்த யூதாவை அடக்கம் செய்தவர்கள் யார்? எங்கே அவர்கள் அவரை அடக்கம் செய்தனர்? ..........

5) ஆல்கிம் அறுபது பேரைப் பிடித்து ஒரேநாளில் கொன்ற சம்பவம் மறைநூலில் எவ்வாறு முன்கூட்டியே குறிப்பிடப்பட்டுள்ளது? ..........

6) வில்லியம் ஹார்வி என்ற விஞ்ஞானி எப்போது மறைந்தார்? ..........

7) "நிலவின் இருண்ட பக்கத்திலிருந்து மண்ணை பூமிக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டு வரும் நாடு எது? அத்திட்டத்தின் பெயர் என்ன? ..........

8) கார்மேல் அன்னை யாருக்கு காட்சி கொடுத்தார்? அவர் காட்சி கொடுத்த இடம் எது? ..........

9) இலங்கையின் தயாரிப்பில் வெளிவந்த "புதியகாற்று" என்ற திரைப்படத்தின் திரைக்கதை வசனங்களை எழுதியவர் யார்? ..........

10) உலகின் மிகவும் வயதான பெண்மணியான மரியா பிரான்யாஸ் எங்கே பிறந்தார்? அவர் எத்தனை யாவது வயதில் இறந்தார்? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

..........

பங்கு : ..........

தொ.பே.இல: ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 56**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**முடிவுத் திகதி : 30.10.2024**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருஅவைச் செய்திகள்!

## வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு அரண், உடன் பிறந்த உணர்வே!

**போ**ஸே கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் நிறுவனர் Enzo Bianchi அவர்களின் நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வன்முறை மற்றும் போர்களுக்கு எதிரான பாதுகாப்பு அரண், உடன் பிறந்த உணர்வே என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உடன்பிறந்த உணர்வு என்ற தலைப்பில் என்சோ பியாங்கி அவர்கள் எழுதிய புத்தகத்தில் உடன் பிறந்த உணர்வு குறித்த தன் கருத்துக்களை பகிர்ந்துள்ள திருத்தந்தை, உலகின் அனைத்து கொடூரச் சிந்தனைகளையும் தடுத்து நிற்பது உடன் பிறந்த உணர்வே எனவும், மனித குலத்தின் துவக்க காலத்தில் இருந்தே போர் உணர்வு இருந்து வருகின்றது என்பதையும் தன் முன்னுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்முறை மற்றும் போரை நோக்கி நம்மை எடுத்துச் செல்லும் பகைமை உணர்வை எதிர்த்து நிற்க உடன்பிறந்த உணர்வு ஒவ்வொரு மனிதரிலும் மீண்டும் மீண்டும் உயிர்பெற்றெழ வேண்டும் எனவும் கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இன்றைய நம் வாழ்வில் உடன்பிறந்த உணர்வு குறைபடுவதே நம் துயர்களுக்கு வழிவகுப்பதாக இருக்கிறது என உரைக்கும் திருத்தந்தை, உடன் பிறந்த உணர்வு இல்லையெனில் சுதந்திரமும் சமத்துவமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்பதையும் தன் முன்னுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

Enzo Bianchi அவர்கள் தன் நூலில், உடன் பிறந்த உணர்வு என்பது, மனிதகுலத்திற்கான இறை அழைத்தல் என விவரித்துள்ளார். ✤

## அணுஆயுத பரவல் தடைக்கான ஆதரவை மீண்டும் வலியுறுத்தும் திருப்பீடம்!

செப்டம்பர் 16 முதல் 20 வரை வியன்னாவில் இடம்பெற்று வரும் அனைத்துலக அணுசக்தி அமைப்பின் (IAEA) பொது மாநாட்டின் 68வது அமர்வின் முதல் நாளில் பன்னாட்டு உறவுகளுக்கான திருப்பீடத் துறையின் செயலர் பேராயர் போல் ரிச்சர்டு காலகர் நிகழ்த்திய உரையின்போது, அணு ஆயுத பரவல் தடை மற்றும் உக்ரைனில் போரினால் அச்சுறுத்தப்பட்ட மின் நிலையங்களின் பாதுகாப்புக்கான உறுதிப்பாட்டை திருப்பீடம் மீண்டும் வலியுறுத்துவதாகக் கூறினார். அணு ஆயுதம் இல்லாத உலகத்தை ஏற்படுத்துவதில் IAEA அமைப்பின் முக்கியப் பங்களிப்பைத் திருப்பீடம் ஒப்புக்கொள்கிறது என்று குறிப்பிட்ட பேராயர் அவர்கள், இது சாத்தியமானது மற்றும் அவசியமானது என்றும் நம்பிக்கைத் தெரிவித்தார்.

## உண்மைகள் வெளியிடப்படுவது ஒரு முன்நிபந்தனை

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்ப்பு ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப் பட்டோருக்கு நீதி வழங்க வேண்டுமென்று, இலங்கை அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், திரு அவையால் நடத்தப்படும் CSR என்னும் சமூக மற்றும் மதங்களுக்கான மையம் வலியுறுத்தியுள்ளதாக யூக்கா செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

விசாரணை குறித்த உண்மைத் தகவல்களை திருத்தி அமைத்தல், ஆதாரங்களை அழித்தல், சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்களைப் பற்றி தெரிவிக்கும் நபர்களைப் பழிவாங்குதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பரிந்துரைகளின் பட்டியல் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது CSR அமைப்பு.

பாகுபாடற்ற நீதிபதிகள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட, முழுமையான அதிகாரம் பெற்ற ஆணையம் ஒன்று தற்போது அவசியம் என்று செப்டம்பர் 16ம் திகதியன்று கூறிய CSRன் ஆய்வுக்குழு, இதுவரை சேகரிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் பகிரங்கப்படுத்தவும், உண்மையை வெளிக்கொணர தீவிரமான விசாரணை நடத்தப்படவும் வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெறும் அதிபர் தேர்தலில் வெற்றிபெறும் 38 வேட்பாளர்களில் ஒருவர் தங்களுக்கு நீதி வழங்குவார் என நம்பிக்கை தெரிவித்துள்ளதாகவும் செய்தி நிறுவனம் தகவல் அளித்துள்ளது. அரசியல் ஆதாயங்களுக்காக இந்தத் தாக்குதலை அடுத்தடுத்த அரசுகள் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டிய கத்தோலிக்கத் திருஅவை மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள், இத்தாக்குதல் தொடர்பாகப் பல ஆண்டுகளாக நடத்தப்படும் விசாரணை குறித்து அதிருப்தியைத் தெரிவித்துள்ளதாகவும் யூக்கா செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

2019ன் குண்டுவெடிப்பு நடந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்போதும் நீதி கிடைக்காமல் காலம் கடந்து வருவதாகக் கவலைத் தெரிவித்துள்ளது குருநாகல் பொதுநிலை மறைப் பணியமைப்பு.

தாக்குதலினால் பாதிக்கப்பட்ட, கொழும்புவை சேர்ந்த சுரினி பெர்னாண்டோ என்பவர், "புதிய தலைவரைப் பொறுப்பேற்க வைப்பதன் வழியாக, ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை பெறுவது உங்கள் கடமை" என்று நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதையும், 'இந்த தாக்குதல்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது பற்றிய உண்மையை அரசு வெளிப்படுத்தும் வரை நீதிக்காகப் போராட உள்ளதாகவும் UCA செய்தி நிறுவனத்திடம் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி - 54 விடைகள்

1. உங்களுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்யுங்கள். ஏனெனில் இன்னும் மூன்று நாட்களில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்கள் உடைமையாக உங்களுக்குக் கொடுக்க விருக்கும் நாட்டை உரிமையாக்கிக் கொள்ள இந்த யோர்தானைக் கடப்பீர்கள்.
2. இஸ்ரயேலர பாவம் செய்து ஆண்டவரிடம் உடன்படிக்கையினை மீறிவிட்டனர். அவர்கள் அழிவுக்குரியவற்றிலிருந்து எடுத்துக்கொண்டனர். இதனால் இஸ்ரயேல் மக்கள் தங்கள் எதிரிகளின் முன் நிற்க முடியவில்லை. புற முதுகிட்டு ஓடினர். இதனால் பயந்து ஆண்டவரின் பேழைக்கு முன் முகம் குப்புறக் கிடந்தனர்.
3. இரும்பு கருவிகளைக்கொண்டு செதுக்காத முழுக்கற்கலால் பீடம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது.
4. எபிரோன் மன்னன் ஒகாம், யார்முத்து மன்னன் பிராம், இலாக்கிசு மன்னன் யாப்பியா, எக்லோன் மன்னன் தெபீர் எருசலேம் மன்னன் அதோனி செதக்கு
5. யோசுவாவினால் ஆண்டவரின் படைத் தலைவனுக்கு கூறப்பட்டது.
6. கர்தினால் Ignatius suharyo Hardjoatmodjo
7. உதயதாரகை 1841ம் ஆண்டு, சத்திய தேவ பாதுகாவலன் 1876ம் ஆண்டு
8. கிறிஸ்தவ இறையியலானது கடவுள் இறைதன்மையில் ஒருவராகவும் ஆள்தன்மையில் தந்தை, மகன், தூய ஆவியார் என மூவராகவும் இருக்கிறார். கடவுளின் இந்த இருப்பே திரித்துவம் அல்லது அதிபுனித திரித்துவம் என்று அழைக்கப்படுகின்றது.
9. 1974ம் ஆண்டு மே மாதம் 11ம்திகதி
10. ஆண்டனி பிளிங்கன்

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

**முதலாம் பரிசு: 1000/=**

J. **கிருஸ்ணவதி,**
சித்தி விநாயகர் குறுக்கு வீதி,
புன்னைச்சோலை, மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு: 700/=**

திருமதி. T. **தேவதர்ஷினி,**
இல. 26/15, 3ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

**மூன்றாம் பரிசு: 500/=**

P. **கேயூஸ்,**
இல. 16/16, பெயிலி குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்டோர் - 05 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

## என் சமையலறையில் ...

தொண்டை கட்டிக் கொண்டால்... கற்பூரவல்லி சாற்றுடன் பனங்கற்கண்டு சேர்த்துப் பருகினால் சரியாகிவிடும்.

அதிக அளவு பாலாடை தேவைப்படுகிறவர்கள் கொதித்து ஆறிய பாலை மூடாமல் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுங்கள். சிறிது நேரத்திலேயே அதிக அளவு பாலாடை தோன்றிவிடும்.

கறிவேப்பிலை, கொத்த மல்லியை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கும்போது மஸ்லின் துணியில் சுற்றி வைத்தால், நிறம் மாறாமல் பச்சைப் பசேலென இருக்கும்.

துவரம்பருப்புடன் இரண்டு மஞ்சள்பூசனித் துண்டுகள் அல்லது சர்க்கரை வள்ளிக் கிழங்கு துண்டுகளை சேர்த்து வேகவைத்து, மசித்து, சாம்பாரில் சேர்த்தால் சாம்பாரும் சுவைக்கும் துவரம் பருப்பின் அளவையும் குறைத்துக்கொள்ளலாம்.


வடை தட்டும்போது உள்ளே ஒரு பன்னீர் துண்டை வைத்து மாவால் மூடி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்தால், வடை வித்தியாசமான சுவையுடன் இருக்கும்.

போட்டிக்கான பரிசுகள் அனுசரணை:
திரு. லெஸ்லிராஜ்
ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி,
தன்னாமுனை.
0779780151




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 181 முடிவுகள்




1st பரிசு - 700/=
ம. லுவிஸ்,
பிரதான வீதி,
தம்பிலுவில் - 01.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்....



2nd பரிசு - 500/=
ஜூலி பிரன்டன் யஷோான் அடன்,
தேவாலய வீதி,
தாழங்குடா - 02.



3rd பரிசு - 300/=
L.J. ரிதுஷாந்த்,
67/11, கொக்குவில் வீதி,
சின்ன ஊறணி, மட்டக்களப்பு.



## உலகம் பிறந்தது தவளைக்காக...!

வனத்தில் ஒரு தவளைக் குடும்பம் வசித்து வந்தது. அம்மா தவளை சந்தோஷமாகக் குதித்துச் சொன்னது.

"இந்த பூமி இருப்பது தவளைகளுக்காக! இந்தக் காற்று இருப்பது தவளைகளுக்காக! நீர்நிலை, தாவரங்கள், புழுக்கள், பூச்சிகள் எல்லாம் இருப்பது தவளைகளுக்காக!"

குட்டித் தவளைகளும் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து குதித்துக்கொண்டு இருந்தபோது, ஒரு பாம்பு அங்கே ஊர்ந்து வந்தது. 'லபக் லபக்' என்று இரண்டு தவளைகளைப் பிடித்துத் தின்றது.

மற்ற தவளைகள் ஓடி ஒளிந்துகொள்ள, பயந்துபோன குட்டித் தவளையிடம் அம்மா சொன்னது: "பாம்புகள் இருப்பதும் தவளைகளுக்காகத்தான்!"

மரணம் என்ற முடிவை ஏற்க முடிந்தவர்களால் தான் வாழ்க்கையை முழுமையாக இரசிக்கமுடியும். எந்தநேரம் வேண்டுமானாலும் வாழ்க்கை நிறுத்தத்துக்கு வரலாம் என்பது தெரிந்திருந்தால்தான், ஒவ்வொரு சுவாசத்தின் மதிப்பையும் உணர்ந்து அனுபவிக்க முடியும்: உண்ணும் ஒவ்வொரு கவளத்தையும் சுவைத்து உண்ண முடியும்: அருந்தும் ஒவ்வொரு துளி நீரையும் ரசித்து அருந்த முடியும்.

இப்போது கிடைத்திருப்பது எதுவும் நிலைத்து இருக்காது என்பதை அறிந்திருந்தால்தான் அதை ஆழமாக ரசிக்கமுடியும். முடிவு இல்லாமல் ஒன்று தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று இருந்தால், அதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

உண்பது, நடப்பது, சுவாசிப்பது போன்ற அடிப்படையான அம்சங்கள் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் மென்மையான உணர்வுகளைக் கவனிக்கத் தவறிவிட்டீர்கள் என்றால், வாழ்க்கையின் மிகப் பெரும் அம்சங்களையும் நீங்கள் நிச்சயம் தவறவிடுவீர்கள். ❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகருக்கான வரவேற்பு





## ஆயித்தியமலை புனித சதா சகாய அன்னை திருத்தலம் நோக்கிய பாதயாத்திரை - 08.09.2024







## ஆயித்தியமலை புனித சதா சகாய அன்னை திருத்தல 70-வது வருடாந்த திருவிழா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org